# சமூக அறிவியல் I

## வகுப்பு IX

SOCIAL SCIENCE I
STD 9
Tamil Medium

**பகுதி-2**
**Part-2**

கேரள அரசு
கல்வித்துறை

மாநிலக் கல்வியாராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் (SCERT), கேரளம்
2016

KT-539-1/Soc. Sci. I-9 (T) Vol-2

## தேசிய கீதம்

ஜன கண மன அதிநாயக ஜய ஹே
பாரத பாக்ய விதாதா,
பஞ்சாப சிந்து குஜராத மராட்டா
திராவிட உத்கல பங்கா,
விந்திய ஹிமாசல யமுனா கங்கா,
உச்சல ஜலதி தரங்கா,
தவ சுப நாமே ஜாகே,
தவ சுப ஆசிஸ மாகே,
காகே தவ ஜய காதா
ஜனகண மங்கள தாயக ஜய ஹே
பாரத பாக்ய விதாதா.
ஜய ஹே, ஜயஹே, ஜயஹே
ஜய ஜய ஜய ஜயஹே!

## உறுதிமொழி

இந்தியா எனது நாடு . இந்தியர் அனைவரும் எனது உடன் பிறந்தோர்.

எனது நாட்டை நான் உயிரினும் மேலாக மதிக்கிறேன். அதன் வளம்வாய்ந்த பல்வகைப் பரம்பரைப் புகழில் நான் பெருமை கொள்கிறேன். அதற்குத்தக நான் என்றும் நடந்து கொள்வேன்.

என் பெற்றோர், ஆசிரியர், மூத்தோர் இவர்களை நான் நன்கு மதிப்பேன்.

நான் எனது நாட்டினுடையவும், நாட்டு மக்களுடையவும் வளத்திற்காகவும், இன்பத்திற்காகவும் முயற்சி செய்வேன்.

**State Council of Educational Research and Training (SCERT)**
Poojappura, Thiruvananthapuram 695 012, Kerala
*Website* : www.scertkerala.gov.in, *e-mail* : scertkerala@gmail.com
Phone : 0471 - 2341883, Fax : 0471 - 2341869
Typesetting and Layout : SCERT
Printed at : KBPS, Kakkanad, Kochi-30
© Department of Education, Government of Kerala

அன்பார்ந்த மாணவர்களே,

சமூகத்தின் வளர்ச்சிப் பரிணாமங்களும் மனிதனின் பன்முக வளர்ச்சியும்தான் சமூக அறிவயலின் கற்றல் பாடங்கள் ஆகும். சமூக வாழ்க்கையையும் நிகழ்வுகளையும் ஒருங்கிணைத்து உண்மையான பகுப்பாய்வு நடத்துவதற்காக சமூக அறிவியல் கற்றல் தேவைப்படுகிறது. இடம் பொருள் உணர்வும் பகுத்தறிவு சிந்தனையும் அறிவியல் கண்ணோட்டமும் வாழ்க்கையின் மதிப்புகளும் பரந்த நோக்கும் சமூகஅறிவியல் கற்றலின் வாயிலாக அடையவேண்டும். வரலாறும் அரசியல் அறிவியலும் சமூக அறிவியலோடு வேறுபடுகிறது எனினும் ஒருங்கிணைப்பின் வாய்ப்புகளும் மண்டலங்களும் கருத்தில் கொண்டு இப்பாடப் புத்தகம் தயாரிக்கப்பட்டுள்ளது.

இடைக்கால உலகம், இந்தியா, கேரளம் ஆகியவற்றின் ஒருங்கிணைந்த கருத்துக்களை அளிப்பதற்கு வரலாற்றுப் பாடங்களுக்கு இயலுகிறது. உலகத்தின் மிகப் பெரிய மக்களாட்சி நாட்டின் குடிமகன் என்ற நிலையில் அடிப்படை உரிமைகளின் முக்கியத்துவமும் தேவையும் அரசியல் அறிவியல் பாடங்களில் தெளிவுபடுத்தப்படுகிறது. சமூகப் பிரச்சினைகளும் அதற்குத் தீர்வுகாணும் முறைகளும் சமூகவியல் கற்றலின் பகுதியாக கூறப்பட்டுள்ளது.

வேற்றுமைகளுக்கு ஆதரவு வழங்கவும் சகிப்புத்தன்மையோடு நடந்து கொள்வதற்கும் மனிதன் உட்பட்ட அனைத்து உயிரினங்களோடும் சமநிலையைக் கைகொள்வதற்கும் சமூக அறிவியல் பாடப்புத்தகம் உங்களுக்குத் துணைபுரியும்.

வாழ்த்துக்களுடன்,

**முனைவர். பி. ஏ. பாத்திமா**
இயக்குநர்
எஸ். சி. இ. ஆர். டி.

# TEXT BOOK COMMITTEE

**Abdul Azees. V.P.,** VPKMMHSS Puthur, Pallikkal, Malappuram.

**Abhilashkumar. K.G.,** Devadar Govt. HSS, Tanur, Malappuram.

**Amar.** HSS Mattannur, Kannur.

**Jayakrishnan. O.K.,** KPCHSS, Pattanoor, Kannur.

**Jothishkumar. B.,** MGHSS, Edathara, Pathanapuram, Kollam.

**Pradeepan. T.,** GHSS, Kallachi, Kozhikkode.

**Faizal. V.,** GVHSS Parayancheri, Kozhikkode.

**Prasad. V.,** GGHSS, Kadammanitta, Pathanamthitta.

**Muralidharan Nair** NSSHSS, Anikkad, Kottayam.

**Mohammed Musthafa** DPO, Malappuram.

**Yoosuf kumar. S.M.,** Govt. Model Boys HSS, Attingal, Thiruvananthapuram.

**Ratnakaran. T.,** GBHSS, Malappuram.

**Haripradeep. S.,** SVHS, Pullad, Thiruvalla, Pathanamthitta.

**Chithra Madhavan,** Research Officer, SCERT

**Yahiya. P.,** GGMGHSS, Chalappuram, Kozhikkode. (Proof Reading)

## Experts

**Dr. Abdul Razak. P.P.,** Asst. Prof., Dept. of History, PSMO College, Thirurangadi, Malappuram.

**Dr. B. Shobhanan.** Head, Dept.of History (Rtd) Kerala University.

**Dr. N.P. Hafis Mohammed.,** Co-ordinator, Sociology Dept. Calicut University.

**Dr. Vijayalakshmi.,** Head, Dept.of History (Rtd) NSS College, Manjeri, Malappuram.

**Dr. V. Kunhali.,** Head, Dept.of History (Rtd) Calicut University.

**Dr. K.P. Rajesh.,** NSS College, Manjeri, Malappuram.

**Dr. Saidalavi.,** Malayalam University, Tirur, Malappuram.

**Acadamic Co-Ordinator**

**Manoj .K.V.,** Research Officer, SCERT

## TAMIL VERSION

**S. Padmakumar.** HSA, GHS Koovakkadu, Kollam

**Dr. Nisha Raffi** Asst. Prof. in Tamil, University College, Palayam, TVM.

**Mary Stella Rosaline. K.** HSA (Rtd), GGHSS, Karamana,TVM.

**Acadamic Co-Ordinator**

**Dr. D. Sahayadhas** Research Officer SCERT

State Council of Educational Research and Training (SCERT)
Vidyabhavan, Poojappura, Thiruvananthapuram. 695 012

# உள்ளடக்கம்


| | | |
|---|---|---|
| 05 | ஒற்றுமையின் இந்தியா | 89 |
| 06 | கேரளம் எட்டு முதல் பதினெட்டாம் நூற்றாண்டு வரை | 105 |
| 07 | தேர்தலும் மக்களாட்சியும் | 121 |
| 08 | நல்ல நாளைக்காக | 135 |

## இந்தப் புத்தகத்தில் கற்றலை எளிமையாக்குவதற்கு சில அடையாளங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன


கூடுதல் வாசிப்பதற்கு- மதிப்பீடு செய்வதற்கு சேர்க்க வேண்டாம்


கற்றல் மேம்பாட்டைத் தீர்மானிக்கும் வினாக்கள்


செயல்பாடுகள்


முக்கிய கற்றல் அடைவுகளில் உட்படுபவை


மதிப்பீடு செய்வோம்


தொடர் செயல்பாடுகள்

## பாட நூலைப் பற்றி

**வ**ரலாறு, அரசியல் அறிவியல், சமூகவியல் போன்றவைகளின் பகுதியாக ஒன்பது அலகுகள் சமூக அறிவியல் முதல் பகுதியில் கொடுக்கப்பட்டுள்ளது. வரலாற்றுப் பாடப் பகுதியில் ஆறு அலகுகளும், அரசியல் அறிவியலில் இரண்டு அலகுகளும், சமூகவியலில் ஓர் அலகும் ஆகும்.

தொடர்ச்சியும், வளர்ச்சியும் உறுதிப்படுத்தும் வகையில் வரலாற்றுப் பாடப்பகுதிகள் ஒழுங்குபடுத்தப் பட்டுள்ளது. ஆறாம் வகுப்பில் கொடுக்கப்பட்ட இடைக்கால உலகத்தின் தகவல்களை விட மேம்பட்ட விதத்தில் தகவல்களுக்கும் கருத்துக்களுக்கும் அவற்றின் பகுப்பாய்விற்கும் இங்கே முக்கியத்துவம் வழங்கப்பட்டுள்ளது. "தீம்மேட்டிக்" அணுகுமுறையின் அடிப்படையில் வரலாற்று செயல்முறையை ஒருங்கிணைத்து வெளியிட முயற்சிக்கப்பட்டுள்ளது. இடைக்கால உலகம், இடைக்கால இந்தியா, இடைக்கால கேரளம் என இடைக்கால வாழ்க்கையின் பல்வேறு நிலைகள் தெளிவான ஆய்விற்கு உட்படுத்தப்பட்டுள்ளது.

**இடைக்கால உலகம் அதிகார மையங்கள்** என்ற அலகில் உலகின் பல்வேறு பகுதிகளில் காணப்பட்ட வேறுபாடான அதிகார மையங்களைப் பற்றி கலந்துரையாடப்படுகிறது. பல்வேறு கண்டங்களிலாக பரவிக் கிடக்கும் வேறுபட்ட அதிகார அமைப்புகள் ஒரு அலகின் வாயிலாக விளக்கப்படுகிறது. ஐரோப்பாவை மையமாகக் கொண்ட இடைக்கால பகுப்பாய்வு முறைகளிலிருந்து வேறுபட்டு இடைக்கால உலகத்தின் வெவ்வேறு துறைகளில் ஏற்பட்ட முன்னேற்றத்தையும் வளர்ச்சியையும் விளக்கிக் கூற முயற்சிக்கப்பட்டுள்ளது.

**கிழக்கும் மேற்கும்: பரிமாற்றங்களின் காலம்** என்ற அலகில் வாணிபத்தின் வளர்ச்சியும் நகரமயமாக்கலும் இடைக்காலத்தில் உலகின் பல்வேறு பகுதிகளில் தோன்றிய நாகரீக முன்னேற்றமும் விளக்கப்பட்டுள்ளது. ஐரோப்பிய வரலாற்று ஆசிரியர்களால் இருண்ட காலம் எனக் குறிப்பிடப்பட்ட இடைக்கால உலகத்தின் ஒளி வீசுகின்ற தன்மை இதன் வாயிலாகத் தெளிவுபடுத்தப்படுகிறது.

தொடர்ந்து மூன்று அலகுகளிலாக இடைக்கால இந்தியாவின் விரிவான வரலாறு விளக்கப்பட்டுள்ளது. தானேஸ்வரத்தை தலைமையிடமாகக் கொண்டு ஆட்சி நடத்தின. வர்த்தனப் பேரரசு வரையுள்ள இந்திய வரலாறை நாம் எட்டாம் வகுப்பில் கலந்துரையாடினோம். வர்த்தனப் பேரரசைத் தொடர்ந்து அனேகம் நாட்டரசுகள் இந்தியாவின் பல்வேறு பகுதிகளில் உயர்ந்து வந்தன. அவர்கள் பாலன்மார்கள்,

ப்ரதிகரன், ராஷ்டிரகூடர்கள், சாளுக்கியர், இராஜபுத்திரர் போன்றோராவர். சில நாட்டரசுகள் வலிமைமிக்கதாக இருந்தது எனினும் நாட்டரசின் ஒருங்கிணைப்பை ஏற்படுத்துவதில் இவர்கள் வெற்றிபெறவில்லை. அதனால் மையப்படுத்தப்பட்ட ஆட்சியை நிறுவுவதற்கோ எல்லைகளை விரிவுபடுத்தி ஒரு பேரரசை கட்டி எழுப்பவோ அவர்களால் இயலவில்லை. பின்னர் இந்தியாவில் ஸல்தனத் - மொகலாய காலகட்டத்தில் வலிமைமிக்க மையப்படுத்தப்பட்ட ஆட்சி உருவானது. தென் இந்தியாவில் இக்காலகட்டத்தில் சோழர் விஜயநகர ஆட்சியும் மராத்திய ஆட்சி அமைப்பும் வளர்ந்து வந்தன. இடைக்கால இந்தியாவின் அரசியல் ஒருங்கிணைப்பிற்கு ஆரம்பம் குறித்த பதிமூன்றாம் நூற்றாண்டு முதலுள்ள அரசியல், சமூக, பொருளாதார வரலாறு இடைக்கால வரலாற்றின் பகுதியாக இப்பாடப் பகுதியில் விளக்கப்பட்டுள்ளது.

**இடைக்கால இந்தியா-அரச கட்டளையும் ஆட்சிமுறையும்** என்ற அலகில் இடைக்கால இந்தியாவின் ஆட்சித் துறையின் சாதனைகளும் அதன் தனித்தன்மைகளும் விளக்கப்பட்டுள்ளது.

**செல்வமும் சமூகமும்** இடைக்கால இந்தியாவின் பொருளாதார- சமூக வளர்ச்சியைக் குறிப்பிட முயற்சித்துள்ளது.

இடைக்கால இந்தியாவின் நாகரீக ஒற்றுமையை **ஒற்றுமையின் இந்தியா** விவாதிக்கிறது. கொள்கைகளின் ஒருங்கிணைப்பும் முன்கால முக்கிய உறவுகளும் பொது இடங்கள் தோன்றியது எவ்வாறென்றும் இந்த அலகு விளக்குகிறது.

இடைக்கால கேரளத்தில் முழுமையான வாழ்க்கை வரலாறும், நவீன காலகட்டத்தின் முக்கியத்துவத்தை **கேரளம் எட்டு முதல் பதினெட்டாம் நூற்றாண்டு வரை** விளக்குகிறது.

தொடர்ந்து இரண்டு அலகுகளின் வாயிலாக அரசியல் அறிவியலின் சில முக்கிய மண்டலங்கள் எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

**இந்தியா அரசியலமைப்பு: உரிமைகளும் கடமைகளும்** என்ற அலகில் அரசியல் அமைப்பின் அடிப்படை உரிமைகளும் அரசு நெறிமுறை கோட்பாடுகளும் அடிப்படை கடமைகளும் விளக்கப்படுகிறது.

ஜனநாயக முறையிலான தேர்தல்களின் முக்கியத்துவமும் தேவையும் வெவ்வேறு தேர்தல் முறைகளும் **தேர்தலும் மக்களாட்சியும்** விவாதிக்கிறது.

சமூகவியலின் முக்கிய மண்டலங்களில் ஒன்றாக வேறுபட்ட சமூகப் பிரச்சினைகளும் தீர்வுகளும் **நல்ல நாளைக்காக** என்ற அலகில் எடுத்துரைக்கப்பட்டுள்ளது.



அலகு

05



# ஒற்றுமையின் இந்தியா

*நான் ஜும்மாமசூதிக்குச் சென்றேன். பின்பு அமைச்சர் அபுல்பசல், அபுல் பைசி ஆகியோரது எளிமையான இல்லங்களைச் சந்தித்தேன். நான் பைசியினுடைய, சிறிய இல்லத்தில் படியைக் கடந்தபோது அந்த பக்திக்கவிஞர் சாம்ராட்டின் முன் இருந்து ஸ்ரீகிருஷ்ண கீர்த்தனம் பாடுவதாக எனக்குத் தோன்றியது. அரண்மனை வாயில் வழியாக நான் ஜும்மாமசூதியின் முற்றத்தில் நுழைந்தேன். மறையும் சூரியனின் செங்கதிர்கள் கற்களைப் பொன்னிறமாக்கியது. அந்த நேரத்தில் சலீம்சிஸ்தியின் நினைவுமண்டபம் இரத்தினக் கற்களைப் போன்று மின்னியது. இன்று பள்ளியின் முன்னால் தீன் இலாகி சீடர்கள் ஒருவருமில்லை. நான் மட்டும்தான் இன்று அங்குள்ள ஒரே புனிதப்பயணி.. நான் படிகள் ஏறி வாசலின் அருகே சென்றேன். சம்ராட் அக்பரின் கல்லறை வாசலில் வெள்ளியால் உருவாக்கிய ஒரு குதிரை லாடம் அறையப்பட்டுள்ளது. குதிரைக் காலடி கேட்டபோது எனக்கு ஒன்று நினைவுக்கு வந்தது. குதிரைப்படை வீரர்களான ஆயிரமாயிரம் ரஜபுத்திர வீரர்கள் எனது தந்தைக்கு உதவுவதற்கு ஓடிவருதாக நான் கற்பனையில் பார்த்தேன்.*

மொகலாயப் பேரரசர் ஷாஜகானின் மகன் ஜகனாரா பாரசீக மொழியில் எழுதிய சுயசரிதையிலிருந்து எடுத்ததுதான் இந்தப் பகுதி. இந்தக்குறிப்பு இடைக்கால இந்தியாவில் காணப்பட்ட பண்பாட்டு ஒருங்கிணைப்புக்கு ஒளி வீசுவதாகும்.

ஆட்சியாளர்களின் சுயசரிதைகள். வாழ்க்கை வரலாறுகள் பயணிகளின் குறிப்புகள், நாட்குறிப்புகள் வரலாற்று நூல்கள் போன்ற பல்வேறு உறைவிடங்களிலிருந்து இடைக்கால இந்திய பண்பாட்டைக்குறித்த தகவல்கள் கிடைக்கின்றன. அது பல்வேறு பண்பாடுகளின் ஒருங்கிணைப்பின் காலமாக இருந்தது. இலக்கியத்திலும், இசையிலும், ஓவிய எழுத்திலும், சிற்பக் கலையிலும் புதிய நடைகள் இடைக்காலத்தில் உருவானது.

இந்தியாவில் வெவ்வேறு மதநம்பிக்கைகளும் ஆசாரங்களும் நிலைநிற்பதைப் புரிந்து கொண்டீர்கள் அல்லவா? இந்தியாவுக்குப் பல்வேறு மதங்கள் வெவ்வேறு காலகட்டங்களில் கடந்து வந்தன. இது இடைக்காலத்தில் புதிய கருத்துகள் உருவாவதற்கு காரணமானது. இத்தகைய பார்வைகளின் ஆதிக்கத்தால் உருவான இரு வகையான அமைப்பே சூபி இயக்கமும் பக்தி இயக்கமும்.

## சூபி இயக்கம்

சூபி இயக்கத்தைக் குறித்து முன்வகுப்புகளில் தெரிந்து கொண்டீர்கள் அல்லவா? முஸ்லீம்களுக்கிடையே ஆத்மிக வாழ்க்கைக்கு முக்கியத்துவம் கொடுக்கவும். ஆடம்பர வாழ்க்கையோடு வெறுப்பு காட்டவும் செய்தவர்களே சூபிகள். பதினொன்றாம் நூற்றாண்டில் மத்திய ஆசியாவிலிருந்து இவர்கள் இந்தியாவுக்கு வந்தனர். இந்தியாவின் பல்வேறு பகுதிகளில் சூபிகள் தங்கினர். அவர்களுக்கு ஏராளமான தொண்டர்கள் இருந்தனர். கடவுளிடம் அதிகம் நெருங்குவதற்குள்ள வழியாக பக்தியைச் சூபிகள் கண்டனர். ஒருவர் கடவுளை உண்மையாக நேசித்தால் அவர் கடவுளிடமும், சுற்றுமுள்ள மனிதர்களிடமும் நெருக்கமாக இருப்பார் என சூபிகள் நம்பினர். எல்லா மனிதர்களையும் மதிக்க வேண்டும் என அவர்கள் கூறினர். சூபி பீர் அல்லது ஷெய்க் எனவும் தொண்டர்கள் முரீத் எனவும் அழைக்கப்பட்டனர்.



**சூபிசம்**

சூபிசம் என்ற சொல்லின் தோற்றம் பத்தொன் பதாம் நூற்றாண்டிலாகும். தசவூப் எனற் சொல்லே சூபிசத்திற்கு இஸ்லாமிய நூற்களில் காணப்படுகின்ற சொல். இந்த சொல்லுக்கு வரலாற்று வல்லுநர்கள் பல அர்த்தங்களை வழங்கியுள்ளனர். கம்பிளி என்று பொருள் படுகின்ற சூப் என்ற வார்த்தையிலிருந்து சூபிசம் என்ற உண்டானது என சில பண்டிதர்கள் கருதுகின்றனர். சூபிகள் அணிகின்ற இறுக்கமற்ற கம்பிளி ஆடையை இந்தச் சொல் குறிப்பிடுகிறதாக அவர்கள் கூறுகின்றனர். சுத்தம் என்று பொருள்படுகின்ற சபர் என்ற வார்த்தையிலிருந்து இது உண்டானது என வேறு சில பண்டிதர்கள் கூறுகின்றனர்.

சூபிகளின் தங்கும் இடங்களாகிய கான்காகுகளைக் குறித்து முன்வகுப்புகளில் படித்தோம் அல்லவா? கான்காகுகள் அன்றைய சமூக – பண்பாட்டு வாழ்க்கையின் மையமாக இருந்தனர். அஜ்மிரில் (இராஜஸ்தான்) உள்ள காஜா மொய்னுதீர் சிஷ்தி புகழ்பெற்ற சுபிகளில் ஒருவராக இருந்தார். கடவுளிடம் நெருங்குவதற்கான ஒரு வழி பக்திப் பாடல்களைப் பாடுவதாகும் என அவர் கூறினார். சூபி மையங்களில் பாடுகின்ற பக்திப்பாடல்கள் தான் கவாலிகள். ஆட்சியாளர்களும் பொதுமக்களும் ஒன்றுபோல மதித்த சுபிவரியன் தான் ஷேக் நிசாமுதீன் ஔலியா. டெல்லிதான் இவருடைய மையம். சுல்தான் காலத்திலும் மொகலாயர் காலத்திலும் பல்வேறு

மதப்பிரிவினர்களுக்கிடையே உறவுகளின் பாலங்களை அமைத்தது சூபிகளாவர்.

கீழே கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையைக் கவனியுங்கள். இதிலிருந்து அக்காலத்தில் புகழ்பெற்ற சூபிவரியர்கள் யார்யார் எனவும் அவர்களுடன் தொடர்புடைய இடங்கள் எவையெனவும் புரிந்து கொள்ளலாம்.



நிசாமுதீன் ஔலியாவின் தர்காவுக்கு முன்னால்

| சூபிவரியர்கள் | இடம் |
|---|---|
| • பாபா பரீத் | • அயோதான் |
| • சையது முகமது ஜேசுதராஸ் | • குல்பர்கா |
| • ஷா ஆலம் புகாரி | • குஜராத் |
| • பகா உதின் - சகரியா | • முல்த்தான் |
| • ஷேக் சிகாபுதீன் சுக்ராவர்தி | • சில்கட் |



ஷேக் நிசாமுதீன் ஔலியும் சீடரான அமீர் குஸ்ருவும் பதினேழாம் நூற்றாண்டில் உள்ள ஓவியம்

இடைக்காலத்தில் பல்வேறு மக்கள் பிரிவினரிடையே பண்பாட்டு ஒருங்கிணைவு உருவாக்குவதில் சூபிசம் வகித்த பங்கை ஆராய்க.

## பக்தி இயக்கம்

எதற்காக
காட்டில் அலைய வேண்டும்?
நகரம் சுற்ற வேண்டும்
இலக்கியம் கூறும்
கடுந்தவம் செய்ய வேண்டும்?
நீலிமையில் கண்விழித்து
வெறும் வயிற்றுடன்
விரதம் இருக்க வேண்டும்?
வாருங்கள்
ஞானப்பிரபுவில் நம்பிக்கை வையுங்கள்.
உண்மைப்பிரபுவான அவர் மட்டும் இரட்சிப்பு
அவரில் அடைக்கலம் தேடுங்கள்.

பக்தி இயக்கத்தின் புகழ்பெற்ற சைவத் துறவியான அப்பருடைய கவிதையின் ஒரு பகுதி மேலே கொடுக்கப்பட்டுள்ளது.

பக்தி இயக்கத்தைக் குறித்து முன் வகுப்புகளில் விவாதித்தோம் அல்லவா? விருப்பமான கடவுளுக்கு தன்னை அர்ப்பணிப்பதை பக்தி என்று கூறலாம். கடவுள்பக்தியின் அடிப்படையில் இடைக்காலத்தில் உருவான கருத்துகளையும் செயல்பாடுகளையும் பொதுவாக பக்தி இயக்கம் என்று கூறலாம். ஒரு மக்கள் இயக்கமாக பக்திஇயக்கம் முதலில் வளர்ந்து வந்தது தென்னிந்தியாவிலாகும். பண்டைக்கால பக்திப்பரம்பரைகளுக்கு சில சிறப்பம்சங்கள் இருந்தன. அவை கீழே கூறப்பட்டுள்ளவையாகும்.

- பக்திக்கவிஞராகிய துறவிகள் தான் பிரச்சாரம் செய்பவர்கள்.
- நிலையான பிராமண பரம்பரைகளை அறைகூவல் விடுத்தனர்.
- பெண்களுக்கும் தாழ்ந்த ஜாதியினருக்கும் உறுப்பினர் பதவி வழங்கினர்.
- இலக்கியத்திலும் இசையிலும் நன்கொடைகள் வழங்கினர்.



**பக்தி இயக்கம் ஒரு சீர்திருத்த இயக்கமாக இருந்தது எனக் கூறுவதன் காரணம் என்ன?**

# ஆழ்வார்களும் நாயன்மார்களும்

தமிழ்நாட்டில் தான் துவக்ககால பக்தி இயக்கம் தோன்றியது. இந்த இயக்கத்திற்கு ஆழ்வார்களும், நாயன்மார்களும் தலைமை தாங்கினர். ஆழ்வார்கள் விஷ்ணு பக்தர்களாகவும் நாயன்மார்கள் சிவபக்தர் களாகவும் இருந்தனர். அவர்கள் பக்திப் பாடல்களை எழுதி பிரச்சாரம் செய்தனர். ஆழ்வார்களும், நாயன்மார் களும் ஜாதிசார்ந்த சமத்துவமின்மைகளை எதிர்த்தனர். அவர்களிடையே துறவிகளும் இருந்தனர். ஆண்டாள் வைஷ்ணவ துறவிகளில் புகழ்பெற்றவர் ஆவார். மற்றொரு பெண் துறவியான காரைக்கால் அம்மையார் ஒரு சிவபக்தராக இருந்தார்.



### இலக்கிய நூற்கள்

63 நாயன்மார்களைக் குறித்து இலக்கிய நூற்களில் கூறப்பட்டுள்ளது. தொழிலாளிகள், விவசாயிகள், வேட்டையாடுபவர்கள், இராணுவ வீரர், பிராமணர், புகழ் பெற்றவர்கள் போன்ற பல்வேறு பிரிவுகளில் உட்பட்டவர்களாக அவர்கள் இருந்தனர். அப்பர், சம்பந்தர், சுந்தரர், மாணிக்கவாசகர் ஆகியோர் அவர்களில் முக்கியமானவர்கள். அவர்களுடைய நூல்க ளின் தொகுப்பு தேவாரம் என்றறியப் படுகிறது. பல்வேறு பிரிவுகளில் உள்ள 12 ஆழ்வார் களைக் குறித்துக் கூறப்பட்டுள்ளது. இவர்களில் பெரியாழ்வார், ஆண்டாள், தொண்டரடிப் பொடி, நம்மாழ்வார் ஆகியோர் முக்கியமானவர்கள். அவருடைய பாடல்கள் நாலாயிரதிவ்யப் பிரபந்தம் என்ற பெயரில் தொகுக்கப்பட்டுள்ளது.



தென்னிந்தியாவில் பக்திஇயக்கம் பிரச்சாரம் செய்வதில் ஆழ்வார்களும் நாயன்மார்களும் வகித்த பங்கை விவாதிக்கவும்.

# வீரசைவ இயக்கங்கள்

> உள்ளவன் சிவாலயம் கட்டுகிறான்
> ஏழையாகிய நான் என்ன கட்டுவேன்?
> எனது உடல் கோவிலும் கால் தூணும்
> தலை தங்கத்தாழிகக் குடமும் ஆகும்
> கூடல் சங்கம தேவா - கேளும்
> உடல் அழியும், ஆத்மா அழிவதில்லை




பசவண்ணா

கர்நாடகத்தில் வாழ்ந்திருந்த பசவண்ணாவின் வசன இலக்கியத்தின் ஒரு சில அடிகளாகும்.

பனிரெண்டாம் நூற்றாண்டில் கர்நாடகத்தில் உருவான ஒரு மக்கள் இயக்கம் தான் வீரசைவ இயக்கம். வீரசைவர் கழுத்தில் சிவலிங்கம் அணிவதால் லிங்காயத்துகள் எனவும் அறியப்படுகின்றனர். இதன் தலைவர் பசவண்ணா ஆவார். இது ஆண் பெண் வேற்றுமை, சாதி வேற்றுமை ஆகியவற்றிற்கு எதிராக முதன்முதலாக செயல்பட்ட இயக்கமாகும். வீரசைவர் ஒரு சிவபக்தராக இருந்தார். வீரசைவ இயக்கத்தின் கருத்துகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

பனிரெண்டாம் நூற்றாண்டில் லிங்காயத்து பிரிவுடன் இணைந்து உருவான ஒரு மக்களாட்சி அரங்குதான் அனுபவமண்டபம். பசவண்ணாவின் தலைமையில் அனுபவமண்டபத்தில் கூட்டப்பட்ட மாநாடுகளில் ஜாதி-மத ஆண் பெண் வேறுபாடின்றி அனைவருக்கும் கடந்து வருவதற்கும், விவாதங்களில் பங்கேற்பதற்கும் வாய்ப்புகள் அளிக்கப்பட்டிருந்தது. சமூகத்திலுள்ள சமத்துவமின்மைகளை எதிர்ப்பதற்கும் ஜாதித் தலைமைத்துவத்தை எதிர்ப்பதற்கும் இது வழி வகுத்தது. தொழிலின் மேன்மைகளைக் குறித்தும் முதலாவதாக எடுத்துரைத்தவர் பசவண்ணா ஆவார். எல்லா நபர்களும் ஏதேனும் ஒரு தொழிலைச் செய்ய வேண்டும் எனவும் அதை மனசாட்சியுடன் செய்ய வேண்டும் எனவும் பசவண்ணா குறிப்பிட்டார். நாம் செய்கின்ற செயல்கள் வழியாக கடவுளைப் புரிந்துகொள்வதற்கு இயலும் என அவர் கூறினார். உலகிலுள்ள எல்லா தொழிலுக்கும் அதற்கான மேன்மை உண்டு எனப் பசவண்ணா நினைவூட்டினார்.



வீரசைவ இயக்கத்தின் சார்பாகக் கன்னட மொழியின் இலக்கிய வடிவமான வசன இலக்கியம் புகழ்பெற்றது. பசவண்ணா, அல்லமபிரபு, அக்க மகாதேவி ஆகியோர் வசனஇலக்கியத்திற்கு பெரிய நன்கொடைகளை வழங்கினர். பசவண்ணா வசனங்கள் வழியாக வேதங்களின் பெருமையை எதிர்க்கவும் சமூகச் சீர்திருத்த முயற்சிகளுக்கு ஊக்கமளிக்கவும் செய்தார். வசன இலக்கியம் கன்னடமொழியின் வளர்ச்சிக்கு மிகவும் உதவியது.



வீரசைவ இயக்கம் முன்வைத்த கருத்துகளின் சமகால முக்கியத்துவத்தை விவாதிக்கவும்.

## பக்தி இயக்கம் வட இந்தியாவில்

தமிழ்நாட்டில் ஆரம்பிக்கப்பட்ட பக்தி இயக்கம் பிற்காலத்தில் வடஇந்தியாவுக்கு பரவியது.



பக்தி இயக்க செயல்பாடுகளுக்கு தலைமை வழங்கியவர்களும் அவர்களுடைய பிரதேசங்களும் நிலப்படத்தில் கொடுக்கப்பட்டுள்ளது. அதிலிருந்து வடஇந்தியாவின் பக்தி இயக்கத்தின் தலைவர்களையும் அவர்களுடைய பிரதேசங்கள் உட்படுகின்ற இன்றைய மாநிலங்களையும் கண்டுபிடித்து கீழே கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையை முழுமை யாக்குங்கள்.

| தலைவர்கள் | மாநிலம் |
|---|---|
| • லால்தேத் | • காஷ்மீர் |
| • வல்லபாசாரியன் | • குஜராத் |
| • சங்கரதேவ | • |
| • நாமதேவ, துக்காராம் | • |
| • சைதன்யன் | • |
| • மீராபாய் | • |
| • குருநானக் | • |



## கபீர்

கடவுள் பல பெயர்களில் அறியப்படுகிறார்
அல்லா, ராம், கரிம், கேசவு, ஹரி, கஸ்ரத்
தங்கத்தை மோதிரமாகவும் வளையலாகவும் மாற்றலாம்
ஆனால் அவை அனைத்தும் தங்கமல்லவா?
வேற்றுமை நாம் பயன்படுத்துகின்ற வார்த்தையில் மட்டுமாகும்


கபீர்

பக்தி இயக்கத்தின் புகழ்பெற்ற கபீரின் தோகயில் உள்ள (பொருளுள்ள இரு அடிகள்) ஒரு பகுதிதான் மேலே கொடுக்கப்பட்டுள்ளது. ஒரே மண்ணினால் உருவாக்கப்பட்ட இரு பாத்திரங்கள் தான் இந்துவும், முஸ்லீமும் என நினைவூட்டிய அவர் இந்து மதம் இஸ்லாம் மதம் ஆகியவற்றிற்கிடையே சகோதரத்துவ உறவை வளர்க்க முயன்றார். எல்லா சாதி மதப்பிரிவினரையும் ஒன்றிணைத்து அன்பின் மதத்தைப் பிரச்சாரம் செய்வது என்பதே கபீரின் இலக்கு. சாதி, மதம், நிறம், செல்வம் போன்றவற்றின் அடிப்படையிலான வேறுபாட்டை கபீர் வன்மையாக எதிர்த்தார். சாதி அமைப்பையும் தீண்டாமையையும் வன்மையாக எதிர்த்த கபீர் மனித ஒற்றுமைக்கு முக்கியத்துவம் வழங்கினார். சிலைவழிபாடு, புண்ணிய யாத்திரை. புண்ணிய நதி நீராடல்கள் ஆகியவற்றை அவர் புறக்கணித்தார். துறவு பூணுவதற்காகக் குடும்ப வாழ்க்கையை வெறுப்பதில் அவர் உடன்படவில்லை.

சூபி-பக்தி பரம்பரைகளோடுள்ள தொடர்ச்சியான கலந்துரையாடல், விவாதம் ஆகியவற்றின் விளைவாகக் கபீரினுடைய கருத்துகள் பரவின.



பல்வேறு பிரிவிலான மக்களுக்கிடையே மதஒற்றுமையை வளரச்செய்வதில் கபீரின் கருத்துகள் வகித்த பங்கை ஆராய்க.

## குருநானக்




குருநானக்

ஒரே கடவுள் நம்பிக்கைக்கு முக்கியத்துவம் வழங்கும் வேறொரு விழிப்புரையாளரே குருநானக். இந்து- இஸ்லாம் மதங்களின் கோட்பாடுகளை ஒன்றிணைப்பதற்கு குருநானக் முயற்சி செய்தார். மதசகிப்புத்தன்மை, சர்வ சகோதரத்துவம் ஆகிய கருத்துகளின் உடமையாளரான அவர் இந்து-முஸ்லீம் மதங்களின் வெளிப்படையான ஆசாரங்களை எதிர்த்தார். கடவுளை அடைவதற்கு குணத்திலும் தூய்மை வேண்டும் என அவர் கூறினார். சிலை வழிபாடு, புண்ணிய யாத்திரை போன்றவற்றை இவர் கடுமையாக எதிர்த்தார். குடும்பத்தலைவரின் பொறுப்புகள் ஆத்மிக வாழ்க்கையுடன் கொண்டு செல்கின்ற நேரான வழி என ஊக்குவித்தார். ஷாபாத் என்று அறியப்படும். ஜெபப் பாடல்கள் நானக்கின் நன்கொடையாகும். மனிதர்கள் அனைவரும் சமமானவர்கள். அவர்களுக்கிடையே சாதிவேற்றுமை கூடாது என அவர் உறுதியாகக் கூறினார். தனது தொண்டர்கள் ஒரு பொது சமையலறை (லக்கர்) யிலிருந்து உணவு உண்பதற்கு தயாராக வேண்டும் என அவர் கூறினார். எந்த சாதியாக இருந்தாலும் அங்கிருந்து உண்ண முடியும் என நானக் கூறினார். நானக்கின் கருத்துகள் பிற்காலத்தில் சீக்கிய மதம் தோன்றுவதற்கு வழிவகுத்தது.



குருநானக்கின் கருத்துகளின் அடிப்படையில் ஒரு குறிப்பு தயார் செய்யவும்.

## பக்தியில் பெண்களின் பங்கு



மீராபாய்

ஏராளமான பெண்கள் பக்தி இயக்கத்திற்கு கவரப்பட்டனர். அவர்களில் முக்கியமானவர் இராஜஸ்தான் கவிஞரான மீராபாய் ஆவார். அவர் கிருஷ்ண பக்தராக இருந்தார். மீராபாய் ஏராளமான பஜனைப்பாடல்களை எழுதியுள்ளார். அவை அனைத்தும் கிருஷ்ணனைப் புகழ்ந்துள்ள பக்திப் பாடல்கள் ஆகும். மீராபாயின் பாடல்கள் குஜராத்திலும் ராஜஸ்தானிலும் உள்ள மக்கள் இப்போதும் பாடுவதுண்டு. மீராபாயிக்கு தொண்டர்களின் குழுவோ, பிரிவோ இருக்கவில்லை. ஆனால் நூற்றாண்டுகளாக தூண்டுதலின் ஓர் உறைவிடமாக அவர் அங்கீகரிக் கப்பட்டார். இவரைத் தவிர இந்தியாவில் பல்வேறு பகுதிகளில் பக்தி இயக்கத்தில் பெண்களின் பங்கைப் பார்க்க முடியும். காஷ்மீரில் உள்ள லால்தேத், மகாராஷ்டராவில் பகினாபாய், கர்நாடகத்தில் அக்க மகாதேவி, தமிழ்நாட்டில் ஆண்டாள், காரைக்கால் அம்மையார் ஆகியோர் முக்கியமானவர்கள்.

## பக்தி இயக்கத்தின் பலன்கள்

இறைஅர்ப்பணம் என்ற இலக்கை வைத்து பக்தி உருவானது. ஆனாலும் இந்திய சமூக அமைப்பில் அது சிறந்த சில விளைவுகளை உருவாக்கியது. இறைவனுக்கு முன் அனைவரும் சமமானவர்கள் என பக்திப் பிரச்சாரம் செய்பவர்கள் பாடியும் கூறியும் நடந்தனர். சாதி வேற்றுமைக்கு எதிரான சமூக சமத்துவம் என்ற சிந்தனை இதன் வழியாக வலிமையடைந்தது. ஆண்பெண் சமத்துவம் என்ற கருத்து உருவாகத் தொடங்கியது. சாதியில் பிற்படுத்தப்பட்ட திருப்பாண் ஆழ்வாரும், கபீரும், லால்தேதும் பக்தி இயக்கத்தை வழிநடத்திய போது சமூகசமத்துவம் என்ற கருத்திற்குப் பிரச்சாரம் கிடைத்தது. வட்டார மொழிகள் வளர்ந்தன. மூடநம்பிக்கைகள் எதிர்க்கப்பட்டன.

**பக்தி இயக்கம் இந்திய சமூக அமைப்பில் உருவாக்கிய மாற்றங்கள் யாவை?**



## வட்டார மொழிகளின் வளர்ச்சி

இந்தியா முழுவதுமுள்ள பக்தி-சூபி இயக்க பிரச்சாரம் செய்தவர்கள் தங்கள் கருத்துகளை அந்தந்த பிரதேசங்களிலுள்ள மொழிகளில் பிரச்சாரம் செய்தனர். சாதாரண மக்களும் புரிந்துகொள்வதற்காகவே அவர்கள் அப்படிச் செய்தனர். இது வட்டார மொழிகளின் வளர்ச்சிக்குக் காரணமானது. இந்தியின் இரு வடிவங்களான பிரஜும் (விரஜமொழி) அவதியும் பேச்சுமொழியாகப் பயன்படுத்தப்பட்டது. பஞ்சாபி, கன்னடம், தெலுங்கு, ஒரியா, ஆசாமிஸ், மராட்டி, வங்காளி, சிந்தி, மலையாளம் ஆகிய மொழிகள் இக்காலத்தில் தோன்றின. இடைக்காலத்தில் நாட்டின் முக்கிய பகுதிகளிலும் நீதிமன்ற மொழி பாரசீக மொழியாக இருந்தது. எனவே பல வட்டார மொழிகளிலும் பாரசீக வார்த்தைகள் உட்புகுந்தது. பாரசீக மொழிக்கும் இந்திக்கும் இடையிலுள்ள தொடர்பின் விளைவாக உருது என்ற புதிய மொழி உருவானது. இடைக்கால இந்தியாவின் பண்பாட்டு ஒருங்கிணைப்பிற்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டுதான் உருதுமொழி. டெக்கான் பகுதிகளில் பேசப்பட்ட உருது மொழியின் மீது தெலுங்கினுடையவும், மராத்தி மொழியினுடையவும் பெரும் தாக்கம் இருந்தது. நாளடைவில் உருது நகரங்களில் மிகவும் பிரச்சாரம் உள்ள பேச்சு மொழியாக மாறியது. மேற்குக்கடற்கரைப் பகுதிகளில் வியாபாரிகள் அரேபிய மொழியைப் பயன்படுத்தினர். அரேபிய மொழி வட்டாரமொழிகளில் தாக்கம் செலுத்தியது. அரேபிய மொழியின் தாக்கம் மூலம் அரபி மலையாளம் என்ற புதிய கலப்பு மொழிவடிவம் உருவானது.

**உருது**



உருது என்ற வார்த்தையின் பொருள் முகாம் (கேம்ப்) என்பதாகும். பல்வேறு மொழி பேசக் கூடிய இராணுவ வீரர்கள் ஒன்றுக்கொன்று பேசுவதற்கு உருது மொழியைப் பயன்படுத்தினர். இதன் இலக்கணம் இந்தி மொழியினுடையதாகும். வார்த்தைகள் பாரசீக, துருக்கி, இந்தி ஆகிய மொழிகளிலிருந்து எடுக்கப்பட்டுள்ளன.

இடைக்காலத்தில் சமஸ்கிருதமொழியையும் பயன்படுத்தியிருந்தனர். விஜயநகர ஆட்சியளாகர்களின் சபைகளில் விழாக்காலங்களில் சமஸ்கிருதம் பயன்படுத்தப் பட்டது. உயர்க்கல்வியின் மொழியாக சமஸ்கிருதம் நிலைநின்றது. சமஸ்கிருத மொழியிலுள்ள மிகப்பெரிய இலக்கியங்களான புராணங்கள் இராமாயணம், மகாபாரதம் ஆகியவை வட்டார மொழிகளில் கிடைத்தது.

இக்காலகட்டத்தில் சில கவிஞர்களையும் எழுத்தாளர்களையும் பாரசீக இலக்கியம் தாக்கம் செலுத்தியது. அக்காலத்தில் எழுத்தாளரான அமீர்குஸ்று புகழ் பெற்றவர். அவருடைய எல்லாக் கவிதைகளும் பாரசீக மொழியிலுள்ளது. ஆனால் அவற்றின் உள்ளடக்கம் அவருக்கு இந்தியாவுடன் உள்ள நட்பையும் இந்தியர் என்ற பெருமிதத்தையும் வெளிக்காட்டுகிறது.




சூர்தாஸ்

அக்காலத்தில் ஏராளமான இந்திய நூற்கள் பாரசீக மொழியில் மொழியாக்கம் செய்யப்பட்டது. இராமாயாணம், மகாபாரதம், அதர்வ வேதம், உபநிஷத்துகள் ஆகியவை அவற்றில் உட்படுகிறது. கல்கணன் எழுதிய வரலாற்று நூலான ராஜதரங்கிணி காஷ்மீர் மன்னரான சைனுள் ஆப்தீன் காலத்தில் பாரசீக மொழியில் மொழியாக்கம் செய்யப் பட்டது.



துளசிதாஸ்

இடைக்காலத்தில் இந்தியாவில் வளர்ந்து முன்னேற்றமடைந்த மொழிதான் இந்தி. இராமனந் தரும் கபீரும் இந்திமொழியில் ஆத்ம உபதேசம் நடத்தினர். கபீரின் தோகைள் இந்தி இலக்கியத்தின் சிறந்த படைப்புக்கு எடுத்துக் காட்டாகும். சூர்தாசின் சூர்சாகர், துளசிதாசின் இராமசரிதமனாஸ், மீராபா யின் பஜனைப்பாடல்கள், மாலிக் முகமது ஜாயசி யின் பத்மாவதி ஆகியன இந்தி மொழியை வளப் படுத்தியது.




மாலிக் முகமது ஜாயசியின் பத்மாவதி


கீழே கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையைக் கவனியுங்கள். அதிலிருந்து அக்காலத்திலுள்ள வட்டார மொழிகளின் வளர்ச்சியைப் புரிந்து கொள்ள இயலும்.

| மொழி | நூற்கள் / இலக்கிய பிரிவு | படைப்பாளிகளின் பெயர் |
|---|---|---|
| • வங்காளி | • மகாபாரதம் வங்காள மொழியில் மொழியாக்கம் செய்யப்பட்டது. | • ஸ்ரீகரநந்தி, கவீந்திரன் |
| | • வங்காளி இராமாயணம் | • கிறுத்திவாச ஓஜ |
| • மராட்டி | • பாடல்கள் | • வமனபண்டிட் |
| • ஒரிய | • காவியங்கள் | • சரளதாஸ |

| | | |
|---|---|---|
| தெலுங்கு | மகாபாரதம் தெலுங்கு மொழியில் மொழியாக்கம் செய்யப்பட்டது. | நன்னய்யா, திக்கன, யரபிரகத |
| தமிழ் | திருமுறை | அப்பர், சம்பந்தர் |
| | நாலாயிரதிவ்யபிரபந்தம் | ஆழ்வார்கள் |
| கன்னடம் | கவிராஜ மார்க்கம் | அமோகவர்ஷன் |
| மலையாளம் | அத்யாத்ம ராமாயணம் கிளிப்பாட்டு | எழுத்தச்சன் |

பக்தி சூபி இயக்கங்கள் வட்டார மொழிகளின் வளர்ச்சிக்கு எவ்வாறு உதவியது? விவாதம் செய்யவும்.

# இசை





இடைக்கால இந்திய இசைவல்லுநரான அமீர் குஸ்ருவின் வார்த்தைகள் மேலே கொடுக்கப்பட்டுள்ளது.

இசை புதிய வடிவங்களைக் கொண்டு வளமடைந்தது இடைக்காலத்திலாகும். தென் ஆசியாவின் காணப்பட்ட இசைநடையாகிய கர்நாடக இசை கூடுதல் வளர்ச்சி யடைந்தது. அக்காலத்தில் நாயிக் கோபால் புகழ்பெற்ற கர்நாடக இசை வல்லுநராக இருந்தார். இடைக்காலத்தில் டெக்கானிலிருந்து ஏராளமான இசைவல்லுநர்கள் வட இந்தியாவுக்கு குடியேறினர். இதே வேளையில் வட இந்தியாவில் பாரசீக இசையின் தாக்கத்தின் விளைவாக புதிய ஒரு இசை நடை வடிவம் கொண்டது. அது இந்துஸ்தானி இசை என்று அறியப்பட்டது. இடைக் காலத்தில் புகழ்பெற்ற இந்துஸ்தானி இசைவல்லுநரில் ஒருவர்தான் சுல்தான் காலத்தில் வாழ்ந்திருந்த அமீர்குஸ்ரு. கர்நாடக இசை

## அமீர் குஸ்ரு



இவர் சிறந்த கவிஞரும், இசை வல்லுநருமாக இருந்தார். இவர் இசைக்கருவிகளை மீட்டவும், பாடல்களைப் பாடவும் செய்கின்ற சூபி ஆசாரமான சாமாவுக்கு சிறந்த வடிவம் கொடுத்தார். இது கவாலி தொடங்குவதற்கு முன்பும் முடிந்த பின்னும் ஒரு ஜெபப்பாடலைப் பாடி கடவுளைப் புகழ்தல் என்பதாகும்.



தான்சென்

வல்லுநரான நாயிக் கோபால் என்பவரிடமிருந்து அமிர்குஸ்று இந்திய இசையில் பயிற்சி பெற்றார். இடைக்கால மன்னர்கள் இந்த இசைப்பிரிவில் ஊக்கமூட்டுபவர்களாக இருந்தனர். பாரசீகத்திலுள்ள தொழில்நுட்பங்கள் இந்திய இசையில் சோதிக்கப்பட்டது, கயால, தும்ரி போன்ற பாடல்முறைகளுக்கு பிரச்சாரம் கிடைத்தது. இது தவிர கிட்டார், சாரங்கி, தபலை போன்ற இசைக்கருவிகள் நடைமுறைக்கு வந்தன. சில சூபிகளுக்கு பாடல்களில் இருந்த ஆர்வமும் இதற்குக் காரணமானது. கயால் என்ற இசைப்பிரிவும் கசலுகளும் இந்தியாவில் சூபிகள் வழியாக வளர்ச்சி அடைந்தது.

அக்காலத்தில் சமஸ்கிருத மொழியிலிருந்த இசை இலக்கியங்கள் பாரசீக மொழியில் மொழியாக்கம் செய்யப்பட்டது. பிரோஸ் ஷா துக்ளக்கின் காலத்தில் இராகதர்ப்பண் என்ற இசை இலக்கியம் பாரசீக மொழியில் மொழியாக்கம் செய்யப்பட்டது. அக்பர் பேரரசர் முழுமையான ஓர் இசை ஆர்வலராக இருந்தார். அவருடைய பாதுகாப்பில் 36 இசைவல்லுநர்கள் இருந்ததாக அபுல் பசல் கூறுகிறார். அவர்களில் புகழ்பெற்றவர் தான்சென் ஆவார். இந்துஸ்தான் இசையை வளப்படுத்திய தான் சென்னின் நன்கொடையே தர்பாரி இராகம்.

பதிமூன்றாம் நூற்றாண்டின் முதற்பகுதியில் வாழ்ந்திருந்த கார்க்தேவனின் சங்கீதரத்னாகரம் என்ற நூல் இடைக்கால இந்தியாவில் இசை உலகின் முக்கிய நன்கொடையாகும். விஜயநகர மன்னர்களின் காலத்தில் பாரசீக- அரபி இசை தென்னிந்தியாவில் கர்நாடக இசையின் மீது தாக்கம் செலுத்தியது.



**இடைக்கால இந்தியாவின் பண்பாடுகளின் ஒருங்கிணைப்பிற்கு இசை எவ்வாறு உதவியது?**

## சிற்பக்கலையும் ஓவியக்கலையும்



பிரகதீஸ்வரர் கோயில் - தஞ்சாவூர் (திராவிட சிற்பக்கலை)

இடைக்கால இந்தியாவில் சிற்பக்கலையும் ஓவியக்கலையும் முன்னேற்றமடைந்தது. அந்த காலத்தில் முக்கிய சிற்பங்களைக்குறித்தும் அதன் சிறப்புகளைக் குறித்தும் முன் வகுப்பில் விவாதம் செய்தோமல்லவா? சிற்பக்கலையின் புதிய முறைகளான திராவிடா, நாகரா, இந்தோ-பாரசீக ஆகியவை இடைக் காலத்தில்தான் வளர்ச்சியடைந்தன. பல்வேறு சிற்பக்கலைகளின்

ஒருங்கிணைப்பு இக் காலத்தின் சிறப்பாகும்.

கொடுக்கப்பட்டுள்ள படங்களைக் கவனியுங்கள். இவை இடைக் காலத்தில் வரையப்பட்ட ஓவியங்களாகும். அக்காலத்தின் ஓவியக் கலையின் சிறப்புகளைப் பார்ப்போம். மொகலாயர் காலத்தில் நடைமுறைக்கு வந்த ஓவியக்கலை நுட்ப ஓவியக் கலை என்ற பெயரில் அறியப்பட்டது. புத்தகத்திலுள்ள ஓவியங்களைப் போன்று சிறிய ஓவியங்களை வரைதல் என்பதுதான் இந்த முறை. இது இந்திய நடையும் பாரசீக நடையும் இணைந்த ஒரு நடையாகும்.


காந்தாரியா கோவில் கஜுராவோ (நாகர சிற்பக்கலை)


செங்கோட்டை - டெல்லி
இந்தோ-பாரசீக சிற்பக்கலை


மொகலாய ஓவியங்கள்

மொகலாய ஆட்சியாளரான ஹுமாயூன் பாரசீக கலைஞர்களைத் தொடர்பு கொள்ளவும், மீர் சையத்அலி, அப்துசமத் ஆகியோரை அரண்மனைக்கு அழைக்கவும் செய்தார். இவர்கள் இருவரும் தான் மொகாலாய ஓவியக் கலையின் கண்டுபிடிப்பாளர்கள்.

அக்பரின் ஆட்சியில் அரச நிறுவனம் ஒன்றில் (கார்கானா) ஓவியம் வரைதல் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. வெவ்வேறு பிரிவுகளில் உட்பட்ட மக்கள் இதில் பங்கெடுத்திருந்தனர். மொகலாயப் பேரரசரான அக்பரின் காலத்தில் ஓவியக் கலைஞரான தஸ்வந்து, ராஸ்நாமா என்ற பெயரில் மகாபாரதக் கதையை முழுமையாக ஓவிய வடிவில் உருவாக்கினார். இந்திய நிகழ்ச்சிகளும் இந்தியாவின் இயற்கை காட்சிகளும் நாளடைவில் ஓவியங்களில் காட்சிப்படுத்தப்பட்டன.


ராஸ்னாமாவிலுள்ள ஓவியங்கள்

பறவைகளையும் மிருகங்களையும் காட்சிப்படுத்துவதில் இக்காலத்திலுள்ள ஓவியர்கள் புலமை பெற்றிருந்தனர். ஜகாங்கீரின் ஆட்சியில் ஓவியங்களின் தரம் பெருகியது. அக்காலத்தின் மிகச் சிறந்த ஓவியர்களாகப்



இராஜஸ்தானி சுவர் ஓவியம்



சோழர் காலத்திலுள்ள சுவர் ஓவியம்

பிஷன்தாஸ், அபுல் கசன் ஆகியோர் இருந்தனர். கட்லயாண்தான் ஷாஜகானின் காலத்தில் வாழ்ந்திருந்த ஓவியராவர்.

இடைக்காலத்தில் ஓவியர்களின் குழுக்கள் காணப்பட்டது. அவர்கள் குஜராத், காஷ்மீர், டெக்கான் போன்ற இந்தியாவின் பல்வேறு பகுதிகளிலிருந்து வந்தவர்கள். அந்தந்த இடங்களில் வட்டார நடைகள் அவர்களுடைய ஓவியக்கலையில் தாக்கம் செலுத்தியது. இந்தியாவிலும், பாரசீகத்திலும் உள்ள புராணங்களிலிருந்தும், கதைகளி லிருந்தும் உள்ள காட்சிகளை அவர்கள் காட்சிப்படுத் தினர். அக்காலத்திலுள்ள சுவர் ஓவியங்களும் புகழ் பெற்றவை ஆகும். சோழர் காலத்தில் தஞ்சைக் கோவிலில் உள்ள சுவர் ஓவியங்கள் இடைக்கால ஓவியக்கலையின் முக்கிய சிறப்பாகும். இந்த காலத்தில் உருவான ஒரு ஓவியக்கலை முறை தான் இராஜஸ்தானி முறை. பரம்பரை நடையும், மொகலாய நடையும் இணைந்ததுதான் ராஜஸ்தான் ஓவியக்கலை.

இடைக்காலத்தின் ஓவியக்கலையின் சிறப்பு களை விளக்கவும்.

இடைக்கால இந்தியா உருவாக்கியெடுத்த பண்பாட்டு ஒருங்கிணைப்பு பிற்கால இந்தியவரலாற்றில் பெரிய மாற்றங்களுக்கு வழி வகுத்தது. தீன்-இ-இலாகியும், சீக்கிய மதவும் ஒருங்கிணைப்பின் மிகப்பெரிய மாதிரிகளாக இருந்தது. தீன்-இ-இலாகி மன்னரால் தாக்கம் செலுத்தப்பட்டதாக இருந்தாலும் சீக்கியமதம் மக்களிடமிருந்து உருவானதாகும். சிற்பக்கலை, ஓவியக்கலை, இலக்கியம் இசை ஆகிய துறைகளில் உருவாக்கப்பட்ட புதிய நடைகள் இந்தியாவின் கலப்புப் பண்பாட்டை வளப்படுத்தியது. இந்தியாவின் பல்வேறு பகுதிகளிலுள்ளவர்களும், வெவ்வேறு மதப்பிரிவினர்களும், இயக்கங்களும் இந்த பண்பாட்டு ஒருங்கிணைவிற்கு அவர்களுடைய நன்கொடைகளை வழங்கியுள்ளனர்.

இடைக்கால இந்தியாவின் பண்பாட்டு வாழ்க்கை என்ற தலைப்பில் ஒரு கருத்தரங்கு நடத்தவும். கருத்திற்கொள்ள வேண்டியவைகள்.

- வட்டார மொழிகள்
- இசை
- ஓவியக்கலையும் சிற்பக்கலையும்

## ஒற்றுமையின் இந்தியா

- **சுபி இயக்கம்** → க்வாஜா மொய்னுதீன் சிஸ்தி, செய்க் நிசாமுதீன் ஒளலியா
- **பக்தி இயக்கம்** → ஆழ்வார்கள் நாயன்மார்கள் → கபீர், சூர்தாஸ், துளசிதாஸ், குருநானக், மீராபாய்
- **வீரசைவ இயக்கம்** → பசவண்ணா
- **கலாச்சார ஒற்றுமை** → வட்டார மொழிகளின் வளர்ச்சி → இசை → சிற்பக்கலை, ஓவியக்கலை

## முக்கிய கற்றல் அடைவுகளில் உட்படுபவை

- சூபி இயக்கத்தின் முக்கியத்துவத்தை விளக்குகின்றனர்.
- ஆரம்பக்கால பக்தி இயக்கத்தின் சிறப்புகளைப் பகுப்பாய்வு செய்கின்றனர்.
- வடஇந்தியாவில் பக்தி இயக்கத்திற்கு தலைமை வழங்கியவர்களை அட்டவணைப்படுத்துகின்றனர்.
- பக்தியைப் பிரச்சாரம் செய்த இந்திய மாநிலங்கள் இந்திய வரைபடத்தில் குறிப்பிடுகின்றனர்.
- பக்தி-சூபி இயக்கங்கள் இந்திய சமூக அமைப்பில் செலுத்திய தாக்கத்தைப் பிரித்தறிகின்றனர்.
- இடைக்கால வட்டார மொழிகளின் வளர்ச்சியை விளக்குகின்றனர்.
- இடைக்காலத்தில் இசை, ஓவியக்கலை ஆகியவற்றின் சிறப்புகளைப் பகுப்பாய்வு செய்கின்றனர்.

## மதிப்பிடலாம்

- இடைக்கால சூபி இயக்கத்தின் சிறப்பம்சங்களை விளக்கவும்.
- நாயன்மார்களும், ஆழ்வார்களும் பக்தி இயக்கத்திற்கு வழங்கிய நன்கொடைகளை மதிப்பீடு செய்யவும்.

- வீரசைவ இயக்கம், முன்னேற்றமான புதிய கருத்துகளுக்கு வடிவம் அளித்தது. கூற்றை நிறுவவும்.
- கபீரும், குருநானக்கும் இந்து-இஸ்லாம் ஒற்றுமைக்குக் குறியீடுகளாக இருந்தனர். இந்தக் கூற்றை மதிப்பிடவும்.
- இடைக்காலத்தில் வட்டார மொழிகளின் வளர்ச்சிக்கு வழிவகுத்த சூழல்களை விளக்கவும்.
- சங்கீதரத்னாகரம் என்ற நூலை எழுதியவர் யார்?

  A. கார்கதேவன் B. தான் சென்

  C. அமீர்குஸ்று D. ராஜாமன்சிங்
- இந்திய இசையில் இடைக்காலம் குறிப்பிட்ட மாற்றங்களின் காலமாக இருந்தது. இந்தக் கூற்றை ஆராயவும்.
- இடைக்காலத்தில் ஓவியக்கலை வளர்ச்சி அடைந்தது என நீங்கள் கருதுகிறீர்களா? ஏன்?
- சரியாக இணைக்கவும்.

| A | B |
|---|---|
| சைதன்யா | காஷ்மீர் |
| துக்காராம் | ஆசாம் |
| மீராபாய் | வங்காளம் |
| சஸ்கரதேவ | கர்நாடகா |
| பசவண்ணா | இராஜஸ்தான் |
| லால்தேத் | மகாராஷ்ரா |



## தொடர் செயல்பாடுகள்

- கபீர், குருநானக் ஆகியோரது பாடல்களைச் சேகரித்து அவற்றின் சமூக முக்கியத்துவம் குறித்து வகுப்பில் விவாதிக்கவும்.
- இடைக்காலத்தில் வட்டார மொழிகளின் வளர்ச்சி என்ற தலைப்பில் கருத்தரங்கு நடத்தவும்.




அலகு

06

# கேரளம் எட்டு முதல் பதினெட்டாம் நூற்றாண்டு வரை

இடைக்கால உலகத்தினுடையவும் இந்தியாவினுடையவும் வரலாற்றினைத்தான் நாம் இதுவரைக் கலந்துரையாடல் நடத்தினோம். C.E எட்டாம் நூற்றாண்டு வரை தமிழகத்தோடு சேர்ந்து காணப்பட்ட கேரளாவின் பழங்கால வரலாறு முன் வகுப்பிலிருந்து புரிந்து கொண்டீர்கள் அல்லவா? C.E எட்டாம் நூற்றாண்டு முதல் பதினெட்டாம் நூற்றாண்டு வரையிலான காலமே கேரளாவின் இடைக்காலம் ஆகும். அரசியல் - பொருளாதரா -சமூகத் துறைகளில் பல்வேறு மாற்றங்கள் இக்காலத்தில் ஏற்பட்டது.



*(C.E. 849-இன் தரிசாப்பள்ளி எழுத்து முறை)*

> *"சுவஸ்தி மன்னர் ஸ்தாணுரவி பல நூறாயிரம் வருடம் எதிரிகளை எதிர்த்து கீழடக்கி ஆள்வதற்கான வருடங்களில் சென்ற வருடம் ஐந்து இந்த வருடத்தில் வேணாடு வாழ்கின்ற அய்யனடிகள் திருவடியும்...."*

சி. இ 849-இன் தரிசாப்பள்ளி எழுத்து முறையினுடையவும் அதன் மொழி பெயர்ப்பினுடையவும் ஒரு பகுதியே கொடுக்கப்பட்டுள்ளது.

இடைக்கால கேரளத்தில் நடைமுறையிலிருந்த வட்டெழுத்து வடிவில் காணப்பட்டதே இந்த எழுத்துமுறை. பெருமாள் மன்னராகிய ஸ்தாணுரவியின் ஐந்தாவது ஆட்சி வருடத்தில் வேணாட்டின் நாடுவாழியான அய்யனடிகள் திருவடிகள் கொல்லம் நகரத்தின் தரிசாப் பள்ளிக்குப் பூமி தானம் கொடுப்பதன் தகவல்கள் தான் இந்தக் குறிப்பில் காணப்படுகிறது.

## வட்டெழுத்து முறை



சுமார் ஒன்பது முதல் பதினான்காம் நூற்றாண்டு வரை கேரளத்தில் நடைமுறையிலிருந்த முக்கியமான எழுத்து முறையே வட்டெழுத்து. கற்களிலோ செம்புத் தகடுகளிலோ இது எழுதப்பட்டிருந்தது. வட்டெழுத்து தமிழ் நாட்டிலும் காணப்பட்டது.

கேரளாவின் நாடுகளைப் பற்றி முக்கியமாக வட்டெழுத்துகளிலிருந்து தான் தகவல்கள் கிடைக்கிறது. நாம் முன்னோர் படித்த தமிழக காலம் முதல் நாடுகள் வளர்ச்சியடைந்தது. பல குடிகளும் ஊர்களும் சேர்ந்ததே நாடு. கீழே கொடுக்கப்பட்டிருக்கும் அட்டவணையைக் கவனிக்கவும்.

**குடி** → விவசாயம் செய்கின்ற தொழில் கூட்டங்களின் குடும்பங்களே குடிகள். குடிகளின் தலைவன் குடிபதி

↓

**ஊர்** → பல குடிகள் சேர்ந்து ஊர்கள் உருவாயின. ஊரின் அதிபர்கள் ஊராளர்கள் ஆவர்.

↓

**நாடு** → பல ஊர்கள் சேர்ந்ததே நாடுகள். நாடுகளின் மேல் அதிகாரம் செலுத்தியவர்கள் நாடு வாழிகள் என அறியப்பட்டனர்.

## மகோதயபுரத்தின் பெருமான்கள் (சி. இ. 800–1122)


- ராஜசேகரன்
- ஸ்தாணு ரவி
- கேதரவி
- கோத கோத கேரள கேசரி
- இந்துக் கோத
- பாஸ்கர ரவி
- ரவி கோத
- ஆதித்யன் கோத
- ராம குலசேகரன்

நாடுகள் எல்லாம் மகோதயபுரத்தை (இன்றைய கொடுங்கல்லூர்) தலைநகராகக் கொண்டு கேரளாவை ஆட்சி புரிந்த பெருமாள் களின் கட்டுப்பாட்டில் இருந்தது. வடக்கு கோலத்து நாடு முதல் தெற்கில் வேணாடு வரையிலான பதினாலு நாடுகளும் பெருமாள்களின் ஆட் சியை அங்கீகரித்திருந்தனர். கேரளா வில் ஒரு மையப்படுத்தப்பட்ட ஆட்சி அமைந்தது இக்காலத் திலாகும். ராஜசேகரன் முதல் ராமகுலசேகரன் வரையிலான அரசர்கள் C.E 800 முதல் 1122 வரையுள்ள காலயளவில் மகோதயபுரத்தைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி புரிந்தனர். பெருமாள்களின் ஆட்சியின் தனித்தன்மைகள் என்னென்ன என்பதை ஆய்வு செய்யலாம்.

- பெருமாள்களுக்கு கோயில் அதிகாரிகள் என்ற பிரதிநிதிகள் காணப்பட்டனர்.

- நாலு தளி என்ற பிராமண சபை ஆட்சிக்காரியங்களில் பெருமாள்களுக்கு உதவி புரிந்தனர்.
- பெருமாள்களுக்கு ஆயிரம் என்ற இராணுவக் கூட்டம் காணப்பட்டது.
- நாடுகள், நகரங்கள், பிராமண கிராமங்கள், கோயில்கள், போன்ற இடங்களிலிருந்து பெருமாள் வரி வசூலித்தனர்.

நிலப்படத்தை ஆய்வு செய்து இடைக்கால கேரளாவில் காணப்பட்ட நாடுகளைப் பட்டியல் படுத்தவும்.




பெருமாள் கால ஆட்சிக்கு மையப்படுத்தப்பட்ட ஆட்சிப் பண்பு காணப்பட்டதா எனக் கலந்துரையாடவும்.

# சொரூபங்கள்

சி. இ. பன்னிரண்டாம் நூற்றாண்டுடன் பெருமாள்களின் மையப்படுத்தப்பட்ட ஆட்சி முடிவுக்கு வந்தது. நாடுகள் சுதந்திரமான ஆட்சிப் பகுதிகளாயின. நாடுகளில் வளர்ச்சியடைந்த அதிகாரத் தலங்கள் நாடுவாழி சொரூபங்கள் என அறியப்பட்டது. முக்கியமான நாடுவாழி சொரூபங்கள் கீழே கொடுக்கப் பட்டுள்ளது.

- கோல சொரூபம் (கோலத்து நாடு)
- நெடியிருப்பு சொரூபம் (ஏற நாடு)
- பெரும்படப்பு சொரூபம் (கொச்சி)
- திருப்பாப்பூர் சொரூபம் (வேணாடு)



### மார்த்தாண்ட வர்மா

வேணாட்டை நவீன முறைக்கு கொண்டு சென்ற ஆட்சியாளராக இருந்தவர் மார்த்தாண்டவர்ம. வேணாட்டை திருவிதாங்கூர் என்ற நவீன நாடாக மாற்றியவரும் மார்த்தாண்ட வர்மாவே. ஆட்சிமுறையை நவீனப்படுத்தியும் இராணு வத்தை வலிமைப்படுத்தியும் பதினெட்டாம் நூற்றாண்டில் மார்த்தாண்ட வர்மா ஆட்சியின் கீழ் வலுவான நாட்டரசாக திருவிதாங்கூர் வளர்ச்சியடைந்தது.



### மைசூர் சுல்தான்கள்

கேரளாவின் மீது படையெடுத்த மைசூரின் ஆட்சியாளர்களே ஹைதர் அலியும் அவரது மகன் திப்பு சுல்தானும். 1792 வரையிலும் மலபாரில் சுல்தான்களின் ஆட்சி காணப்பட்டது.


மருமக்கத் தாயத்தைப் பின்பற்றிய சுயாட்சி உரிமையுள்ள பரம்பரை வீடுகளே (குடும்ப வீடு) சொரூபங்கள் ஆகும். சொரூபங்களுக்கு இராணுவக் கூட்டங்களும் காணப்பட்டது. வேணாட்டின் அரிசிப்படி ஜனம், கோலத்து நாட்டின் படமலை நாயன்மார்கள், நெடியிருப்பின் 'லோகரு' போன்றவர்கள் இராணுவக் கூட்டங்களாக இருந்தனர்.

நாடுவாழி சொரூபங்கள் ஒவ்வொன்றும் அதிகாரத்தை வலுப்படுத்துவதற்காக ஒருவருக்கொருவர் சண்டையிட்டு பொதுவான எதிரிக்கு எதிராக ஒன்றிணையவும் செய்தனர். பதினைந்தாம் நூற்றாண்டின் இறுதியுடன் கேரளக் கடலோரப் பகுதிகளில் வாணிபத்திற்காக வந்த போர்ச்சுகீசியர்களும் டச்சுகாரர்களும் இதுபோன்ற போட்டிகளில் தங்களது வியாபார நன்மைகளுக்கு ஏற்ப ஈடுபட்டனர்.

பதினெட்டாம் நூற்றாண்டு வரை நாடுவாழி சொரூபங்கள் பெரிய மாற்றங்கள் எதுவும் இல்லாமல் நிலை கொண்டது. பதினெட்டாம் நூற்றாண்டின் இரண்டாம் பகுதியில் மைசூர் சுல்தான்களான ஹைதர் அலியும் திப்பு சுல்தானும் கேரளா வில் நடத்திய படையெடுப்புகள் வடக்குக் கேரளாவின் நாடுவாழிகளில் கலக்கத்தை ஏற்படுத்தியது. நெடியிருப்பும் கோலேஸ்வரமும் பிற சிறு சொரூபங்க ளும் தேசங்களும் எல்லாம் மைசூர் சுல்தான்களின் கட்டுப்பாட்டுக்குள் வந்தது. மைசூர் சுல்தான்களின் படையெடுப்புக்குப் பயந்த பெரும்பாலான நாடுவாழிகளும் தேசவாழிகளும் வேணாட்டில் குடியேறினர். கொச்சியின் பெரும்படப்பு சொரூபம் மைசூர் சுல்த்தான்களின் பரமாதிகாரத்தை அங்கீகரித்தது. திருவிதாங்கூர் எதிர்த்து நின்றது.

இக்காலத்தில் கேரளம் திருவிதாங்கூர், கொச்சி, மலபார் என மூன்று பகுதிகளாக மாறியது. பதினெட்டாம் நூற்றாண்டின் இறுதியோடு ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனி திப்புவைத் தோற்கடித்தது. அத்துடன் திப்புவின் ஆட்சியின் கீழிருந்த மலபார் முற்றிலுமாக ஆங்கிலேயர்களின் ஆட்சியின் கீழ் வந்தது. சுதந்திரமான ஆட்சியாளர்கள் என்ற நிலையிலுள்ள நாடுவாழி சொரூபங்களின் அதிகாரம் இத்துடன் மலபாரில் முடிவுக்கு வந்தது. திருவிதாங்கூரும் கொச்சியும் நாட்டரசுகளாகத் தொடர்ந்தது.

எட்டுமுதல் பதினெட்டாம் நூற்றாண்டு வரையிலான கேரளாவின் அரசியல் வரலாற்றைப் பகுப்பாய்வு செய்க.



## நிலவுடமை உரிமைகள்

பதினெட்டாம் நூற்றாண்டு வரையிலான கேரளாவின் அரசியல் வரலாற்றை நாம் இதுவரைக் கலந்துரையாடினோம். இனி அக்காலத்தில் பூமியின் மேல் வளர்ச்சியடைந்த உடமை உரிமைகளைப் பற்றி ஆய்வு செய்யலாம்.

தேவஸ்வம் நிலத்தின் உரிமையாளர்கள் ஊராளர்கள் என அறியப்பட்டனர். மன்னர்களோ பிராமணர்களோ கோயில் நபர்களோ இந்த நிலங்களில் நேரடியாக விவசாயம் செய்திருக்கவில்லை. இவர்கள் விவசாயத் திற்காக நிலத்தை இடைநிலையாளர்களுக்கு வழங்கினர். அவர்கள் காராளர் என அறியப்பட்டனர். அவ்வாறு நாடுவாழிகள், ஊராளர்கள், அவர்களுக்கும் கீழாக காராளர் கள் என ஒரு அதிகாரச் சங்கிலித் தொடர் தோன்றியது.

| | |
|---|---|
| சேரிக்கல் | நாடுவாழிகளின் கட்டுப்பாட்டிலுள்ள நிலம். |
| பிரமஸ்வம் | பிராமணர்களின் கட்டுப்பாட்டிலுள்ள நிலம் |
| தேவஸ்வம் | கோயில்களின் கட்டுப்பாட்டிலுள்ள நிலம் |

### திருநெல்லி எழுத்துமுறை



“திருநெல்லி தேவருக்குத் தினம் பனிரண்டு அடிக்கு அரிசி மூன்று நாழியால் ஆறு நாழியும் ஒரு நந்தா விளக்கும் ஏற்படுத்தி கீழ்க்காட்டீய்ப் போழச் சேரிக்கல் பூமி அட்டிக்கோடுத்து மூத்த கூறு வாழுகின்ற குந்நிக் குட்ட வர்மன் என்ற அடிகள் வீரக் குறும்புறையார் திருவடி அருளிச் செய்து”....

(பூமியின் உடமையைக் குறிப்பிடும் திருநெல்லி எழுத்து முறையின் மொழி பெயர்ப்பு)

பனிரண்டாம் நூற்றாண்டு முதல் பதினெட்டாம் நூற்றாண்டு வரையிலான காலத்தில் நிலவுடமை உரிமையில் மறுபடியும் மாற்றங்கள் ஏற்பட்டது.

- பூமியின் மீதான உரிமை தலைமுறைகளின் வாயிலாகக் கைமாறுகின்ற பிறப்புரிமை ஆனது. இதுபோன்ற நிலம் ஜன்மம் நிலம் எனவும் அதன் உரிமையாளர்கள் ஜன்மி எனவும் அழைக்கப்பட்டனர்.

- இக்காலத்தில் வெறும் பாட்டம் என்ற முறை பரவலாக நடைமுறையிலிருந்தது. உற்பத்திப் பொருளின் ஒரு குறிப்பிட்ட பங்கு ஜன்மிக்கு பாட்டமாக வழங்கலாம் என்ற அடிப்படையில் ஜன்மிகள் குடியான்மார்களுக்கு வழங்கிய நிலமே வெறும் பாட்டம் பூமி.

**"காணம் விற்றும் ஓணம் உண்ணணும்"**

**"காணம் விற்றாலும் மானம் விற்கக் கூடாது"**

**"காணம் விற்றாலும் வரம்பு விற்கக்கூடாது"**

இந்தப் பழமொழிகள் நீங்கள் கேள்விப்பட்டதுண்டா? ஓணம், மானம் (தன்மானம்), வரம்பு (வழி) போன்றவைகள் என்ன என்பது அனைவருக்கும் தெரியுமல்லவா காணம் என்றால் என்ன? அதை விற்க முடியுமா?

காணம், ஒற்றி என்ற பெயர்களில் அறியப்பட்ட பணயக் குத்தகை பெருமாள்கள் காலத்திற்குப் பின் பிரபலமடைந்தது. இதன்படி நிலத்தைக் குத்தகைக்கு எடுக்கின்ற ஆள் (காணக்குடியான்) ஒரு தொகையை நில உரிமையாளருக்குக் கொடுத்து நிலத்தைக் குத்தகைக்கு எடுத்து விவசாயம் செய்கிறார். இந்த நிலத்தை விற்பதற்கோ கைமாற்றம் செய்வதற்கோ காணக்குடியானுக்கு உரிமையில்லை. விவசாயம் செய்வதற்கான உரிமை மட்டுமே இருந்தது.

அக்காலகட்டத்தில் காணப்பட்ட ஒருவகை வரிச்சலுகையே குழிக்காணம். இதன்படி காய் வரத் தொடங்காத மரங்களைக் குத்தகைக் கணக்கிடுவதிலிருந்து ஜன்மிகள் விலக்கு அளித்திருந்தனர்.



பதினெட்டாம் நூற்றாண்டு வரை கேரளாவில் தோன்றிய நிலவுடமை முறைகளைப் பட்டியல் படுத்தவும்.

- சேரிக்கல்
-
-
-
-
-

பதினெட்டாம் நூற்றாண்டின் இரண்டாம் பகுதியில் நிலம் அளந்து கணக்கிடப்பட்டது. இக்காலத்தில் மலபார் மைசூர் சுல்தான்களின் ஆட்சியின் கீழிருந்தது. விவசாய நிலத்தின் மொத்த உற்பத்தியைக் கணக்கிட்டு அதிலிருந்து ஒரு குறிப்பிட்ட தொகையை வரியாக வசூலிக்கும் முறையை மைசூர் சுல்தான்கள் பின்பற்றியிருந்தனர். பின்னர் ஆங்கிலேயர்கள் நிலத்தை அளந்து ஒவ்வொரு நிலமும் ஏக்கர், சென்ட் எனப் பிரித்து சர்வே எண் வழங்கிக் குறிப்பிட்டனர். இதற்கு இணையான சர்வேக்கள் கொச்சியிலும் திருவிதாங்கூரிலும் நடந்தது. கொச்சியில் இது கேட்டெழுத்து எனவும் திருவிதாங்கூரில் கண்டெழுத்து எனவும் அறியப்பட்டது. இவ்வாறு திட்டப்படுத்திய நிலத்தின் மேல் குறிப்பிட்ட ஒரு வரி சுமத்தப்பட்டது.



ஒரு நிலவுடமை ஆவணத்தை ஆய்வு செய்து அதில் சேரிக்கல் பண்டார வகை, ஜன்மம், பிரம்மஸ்வம், காணம், ஒற்றி, குழிக்காணம் போன்ற நிலத்தைக் குறிக்கும் ஏதேனும் வார்த்தை காணப்படுகிறதா எனக் கண்டுபிடிக்கவும்.

# விவசாயமும் தொழிற்கூடங்களும்

இடைக்காலத்தில் பிரபலமாகக் காணப்பட்ட நெல் விதைகளைப் பற்றி ஒரு மூதாட்டி அளித்த தகவல்களைக் கவனிக்கவும்.

> "தவளைக்கண்ணன், ஆரியங்காளி, ஒற்றல மூடன், கோழிவாலன் போன்ற விதைகளை விதைத்து இரண்டு விளைச்சல்கள் (கன்னி,மகரம்) வயலிலும் மூன்று மாதம் மூப்புடைய ஏச்சிலாடன், கறுத்தேடக்கன் சோமால, பெரிய வித்து, நகர போன்ற விதைகள் விதைத்துள்ள ஒரு விளைச்சல் தோட்டத்திலும் செய்யாள, வெளுத்த, கொய்னா, கறுத்த கொய்னா, கரியாள, வில்லன் எறயன் கவுங்ஙம் புத்தாள போன்ற விதைகளை விதைத்த ஒரு விளைச்சல் மலையிலும் பயிர் செய்யப்பட்டிருந்தது."

இதுபோல் உங்கள் பகுதியில் பயிர்செய்யப் பயன்படுத்திய விதைகள் எவை எனத் தேடல் நடத்தவும்.

வயல், தோட்டம், தோப்புகள், மலைப்பகுதிகள் போன்ற இடங்களில் அக்காலத்தில் விவசாயம் செய்யப்பட்டது. வயலில் பெரும்பாலும் நெல் விளைவிக்கப்பட்டது. தோட்டங்களில் நெல், சாமை, முதிரை, கிழங்கு வகைகள் போன்றவை பயிர்செய்யப்பட்டது. தென்னை, கமுகு, நல்லமிளகு, இஞ்சி, மஞ்சள், பயிறு வகைகள், கிழங்கு வகைகள் போன்றவை தோப்புகளில் விளைவிக்கப்பட்டது. மலைப்பகுதிகளில் மலைநெல் உற்பத்தி செய்யப்பட்டது. மலைப்பகுதியின் வனச் செல்வங்களும் அக்காலத்தில் சேகரிக்கப்பட்டிருந்தது. இடவப்பாதியையும் (தென்மேற்று பருவகாலம்) துலாவர்ஷத்தையும் (வடகிழக்குப் பருவகாலம்) நம்பியிருந்த விவசாயம் தான் அன்று காணப்பட்டது. காணமும் பச்சிலைகளு மடங்கிய இயற்கை உரங்கள் அக்காலத்தில் விவசாயத்திற்குப் பயன் படுத்தப்பட்டது.

வெவ்வேறான தொழில்களில் ஏற்பட்ட மக்கள் சமூகம் கேரளத்தில் தோன்றியதும் அவர்கள் ஒவ்வொரு சாதிகளாக வளர்ந்ததும் இடைக்காலத்திலாகும்.

இடைக்காலத்தில் எந்தெந்த தொழிற்கூட்டங்கள் இடைக்காலத்தில் காணப்பட்டது எனப் பார்க்கலாம்.

- விவசாயமும் விவசாயக் கருவிகளின் தயாரிப்புமாகத் தொடர்பு கொண்டவர்.
- கைவினை – உலோக தயாரிப்புமாகத் தொடர்பு கொண்டவர்.
- வியாபாரவுமாகத் தொடர்பு கொண்டவர்.
- துணி நெய்தல், எண்ணெய் ஆட்டுதல் போன்றவற்றோடு தொடர்பு கொண்டவர்.
- கோயில் வழிபாட்டுடன் தொடர்பு கொண்டவர்.
- நாடுவாழி சொரூபங்களோடு தொடர்பு கொண்ட வெவ்வேறு அலுவலர்கள்.

ஒரு குறிப்பிட்ட வேலையைச் செய்தவர்களின் வாரிசுகளும் அதே வேலையைச் செய்தனர். ஒரே வேலை செய்தவளர்களின் கூட்டங்கள் காலப்போக்கில் ஒரே ஜாதியாக வளர்ந்தது. வயலில் விவசாயம் செய்திருந்த அடியாளர்கள் இடைக்கால ஜாதிவரிசையில் மிகவும் தாழ்நிலையிலும் பிராமணர்கள் மிகவும் உயர்ந்த



### சுத்தம் அசுத்தம்

இடைக்கால ஜாதி முறையின்படி மேல் ஜாதிகள் சுத்தமும் கீழ் ஜாதிகள் அசுத்தமாகக் கணக்கிடப் பட்டிருந்தனர். கீழ் ஜாதியினர் மேல் ஜாதியின ரைத் தொட்டாலும் அருகில் வந்தாலும் கண்டா லும் மேல் ஜாதியினரின் சுத்தம் நஷ்டமாகும் எனக் கருதப்பட்டது.

நிலையிலும் காணப்பட்டனர். குலத்தொழிலின் அடிப்படை யில் பிற ஜாதியாளர்கள் இவ்விரு பிரிவுகளுக்கும் இடையில் இடம் பெற்றனர். ஜாதியின் அடிப்படையில் சுத்த – அசுத்த கற்பனைகளும் வளர்ச்சியடைந்தது. மண்ணின் உடமையாளர்கள் என சுயமாகக் கருதியவர்களும் மண்ணில் வேலை செய்தவர்களையும் குலத் தொழில் செய்திருந்தவர்களையும் கீழ் ஜாதியினராக மட்டுமே கருதினர்.

மலபாரிலும் கொச்சியிலும் திருவிதாங்கூரிலும் பத்தொன்பதாம் நூற்றாண்டின் முதல் பகுதியோடு மக்கள் சமூகத்தைப் பல ஜாதியாகப் பிரித்துக் குறிப்பிட்டனர். அத்துடன் குலத்தொழில் செய்தாலும் இல்லையென்றாலும் ஜாதிப்பிரிவு பிறப்பின் அடிப்படையில் ஆனது.



கேரளாவில் ஜாதிகள் எவ்வாறு தோன்றியது எனக் கலந்துரையாடவும்.

## வாணிப உறவுகள்

பழங்காலத்தைப் போல இடைக்காலத்திலும் கரைவழியாகவும் கடல் வழியாகவும் உள்ள வாணிபம் தொடர்ந்தது. கொல்லம், கொடுங்கல்லூர், கோழிக்கோடு, பந்தலாயினி, மாடாயி, வளபட்டணம் போன்றவை அக்காலத்தைய முக்கியமான வாணிப மையங்களாக இருந்தது. எந்தெந்த மாதிரியான வாணிபங்கள் இடைக்காலத்தில் காணப்பட்டது என ஆய்வு செய்யலாம்.

| வட்டார வாணிபம் | தூரதேச வாணிபம் | வெளிநாட்டு வாணிபம் |
|---|---|---|
| சந்தைகளும் அங்காடிகளும் முக்கியமான வாணிப மையங் களாக இருந்தன. நெல் அரிசி, பயிறு வகைகள், காய்கறிகள், வெற்றிலை, உப்பு, மீன் போன்ற அன்றாடத் தேவைக்கான பொருட் கள் பரிமாற்றம் செய்யப்பட்டது. | தமிழ்நாடு, கர்நாடகம், ஆந்திரா, கலிங்கம், ஒரிஸ்ஸா போன்ற பகுதிகளோடு தூரதேச வாணி பம் செய்தனர். தமிழ் பிராமணர் களும் செட்டிமார்களும் முக்கி யமான வியாபாரிகளாக இருந் தனர். அரிசி, மிளகாய், பருத்தி, பட்டு, பிற துணி வகைகள், குதிரைகள் போன்றவை இங்கே கொண்டு வரப்பட்டது. நல்லமிள கும் பிற வாசனைத் திரவியங்க ளும் இங்கிருந்து கொண்டு செல்லப்பட்டது. | அரேபியர்கள், சீனர்கள், ஐரோப் பியர்கள் போன்றவர்கள் முக்கிய மான வெளிநாட்டு வணிகர்களாக இருந்தனர். நல்லமிளகு, இஞ்சி, கறுவப்பட்டை, ஏலம் பிற வாச னைத் திரவியங்கள் தேங்காய் போன்றவை இங்கிருந்து கொண்டு செல்லப்பட்டது. தங்கம், செம்பு, ஈயம், சீனக் களிமண் பாத்திரங் கள், சீனப்பட்டு போன்றவை அக்காலத்தில் கேரளாவுக்குக் கொண்டு வரப்பட்டது. |

“கொவலாதச் செட்டி அஞ்சுவண்ணம்
குட்டும்மணிக்கிராமத்தார் மக்கெள்
நம்மளால் நாலு நகரத்திலும்
நாலரக்கொள்க குடிக்குசொன்னா”

(பய்யன்னூர் பாட்டு)

இவை பதினான்காம் நூற்றாண்டின் பய்யன்னூர் பாட்டின் வரிகள் ஆகும். இதில் கூறப்பட்டிருக்கும் செட்டிமார்கள் வணிகர்களாவார்கள் அஞ்சுவண்ணம், மணிகிராமம் என்றால் என்ன?

இடைக்கால கேரளாவில் பதினாலாம் நூற்றாண்டு வரைக் காணப்பட்ட வணிகச் சங்கங்களே அஞ்சு வண்ணமும் மணிகிராமமும். இச்சங்கங்கள் கரைவழி வணிகத்திலும் கடல்வழி வணிகத்திலும் அதிக ஈடுபாட்டுடன் பங்கு கொண்டிருந்தனர். பதினைந்தாம் நூற்றாண்டின் இறுதியில் போர்ச்சுகீசியர்கள் மலபார் கடற்கரைப் பகுதிகளை வந்தடையும் வரை அரேபியர்களும் சீனர்களும் முக்கியமான வியாபாரிகளாக இருந்தனர். ஐரோப்பியர்களின் வருகைக்குப் பின் அரேபிய – சீனா வியாபாரங்கள் நலியத் தொடங்கியது. கடல் வழி வணிகத்தின் குத்தகை ஐரோப்பியர்களுக்குக் கிடைத்தது. அவ்வாறு கேரளாவின் விளைச்சல் செல்வங்கள் ஐரோப்பியர்களின் ஆதிக்கத்தின் கீழ் வந்தது.

## கலாச்சார ஒருங்கிணைப்பு

□முனிவர்கள் வாழ்ந்திடும் ஆசிரமங்களில்
வாழ்ந்திடும் கொடிய விலங்குகளைப்போல்
பரஸ்பரம் வேறுபட்ட தேவதா-கணம்
வாழ்ந்து ஐக்கியமுடன் புரத்திலாக□

(மூஷகவம்சம் 12-ஆம் சருக்கம் 112-ஆம் சுலோகம்)

ஆசிரமத்தின் முன்னில் பகையை மறைந்த கொடிய விலங்குகள் இணக்கத்துடன் வாழ்வதைப் போல வெவ்வேறான தேவதைகளை வணங்கிருந்தவர்கள் ஒற்றுமையுடன் இடைக் காலக் கேரளாவில் வாழ்ந்திருந்தனர் என மூஷக வம்ச காவியத்தின் இந்த வரிகள் குறிப்பிடுகிறது.

வாணிபத்தின் வாயிலாகப் பல பொருட்கள் பரிமாற்றம் செய்யப்பட்டதைப் போல் பல்வேறு நாகரீகங்களின் பரிமாற்றமும் நடந்திருந்தது.

### மூஷக வம்ச காவியம்

பதினொன்றாம் நூற்றாண்டில் இயற்றப்பட்ட மூஷக வம்ச காவியம் கேரளாவினுடையவும் இந்தியாவினுடையவும் முதல் ராஜவம்சாவலி சரிதமாகும். சுமார் ஆறாம் நூற்றாண்டு முதல் பதினொன்றாம் நூற்றாண்டு வரை கோலத்து நாட்டை ஆட்சி புரிந்த மூஷக அரச வம்சத்தைச் சேர்ந்த ராமகடன் முதல் ஸ்ரீகண்டன் வரையிலான சுமார் நூற்றுப் பத்தொன்பது அரசர்களின் ஆட்சிக்காலத்தைப் பற்றி இக்காவியத்தில் விவரிக்கப்பட்டுள்ளது. ஸ்ரீகண்டனின் அரசவைக் கவிஞர் அதுலன் இக்காவியத்தை இயற்றியிருக்கிறார்

கேளராவின் கலாச்சார ஒருங்கிணைப்பில் இவ் வாணிப உறவுகள் பெரும்பங்கு வகித்தது. பல்வேறு மதப்பிரிவினைச் சேர்ந்தவர்கள் ஒருவருக்கொருவர் நட்புடன் ஒன்றிணைந்த ஒரு நிலப்பகுதியாக நமது நாடு மாறியது இடைக்காலத்திலாகும். பிராமணர்களும், சமண – புத்த மதப்பிரிவினர்களும், யூத – கிறிஸ்தவ – இஸ்லாம் மதங்களும் கேரளாவில் பரவியது இடைக்காலத்திலாகும். கேரளாவின் ஆட்சியாளர்கள் எல்லா மதப்பிரிவினர்களையும் ஒரே மாதிரியாகக் கருதினர். நாடுவாழிகள் பிராமணர்களுக்கும் கோயில்களுக்கும் நிலமும் பிறவும் தானமாக வழங்கியதைப் பற்றி முன்னர் குறிப்பிட்டதை ஞாபகப்படுத்துவீர்கள் அல்லவா? அது போலவே சமண - புத்த - யூத - கிறிஸ்தவ - இஸ்லாம் மதப்பிரிவில் பட்டவர்களுக்கும் பல வகையான உரிமைகளை நாடுவாழிகள் வழங்கியிருந்தனர்.


## நாடுவாழிகள் வழங்கிய உரிமைகள்

- தெற்கு திருவிதாங்கூரின் ஆய் மன்னர் விக்கிரமாதித்திய வரகுணன் ஒன்பதாம் நூற்றாண்டில் ஸ்ரீ மூல வாசத்தில் புத்தமத மடங்களுக்கு வழங்கிய உரிமைகள். (பாலியம் செப்பேடு)
- C.E ஒன்பது, பத்து, பதினொன்றாம் நூற்றாண்டுகளில் தாழைக்காவு, கிணாலூர், ஆலத்தூர், திருமண்ணூர், சிதறால் போன்ற இடங்களில் சமண மத மடங்களுக்கு வழங்கிய தானங்கள் (திருமண்ணூர் சாசனம்)
- வேணாடு நாடுவாழி அய்யனடிகள் C.E ஒன்பதாம் நூற்றாண்டில் மணிகிராமம் வணிகக் குழுவைச் சேர்ந்த மார் சவீர் ஈகோ என்ற கிறிஸ்தவ வியாபாரிக்கு, கொல்லம் நகரத்தில் வியாபாரம் செய்வதற்கும் தரிசாப்பள்ளியை கட்டி முடிக்கவும் வழங்கிய உரிமை (தரிசாப்பள்ளி சாசனம்)
- அஞ்சு வண்ணம் வாணிபக் குழுவைச் சேர்ந்த ஜோசப் ரப்பான் என்ற யூத வியாபாரிக்கு கொடுங்கல்லூர் நகரத்தில் வாணிபம் செய்வதற்காகப் பெருமாள் மன்னரான பாஸ்கர ரவி பத்தாம் நூற்றாண்டில் வழங்கிய உரிமை (யூத சாசனம்)
- C.E பதிமூன்றாம் நூற்றாண்டில் நெடியிருப்பு சொருபத்தின் சாமூத்ரி மன்னர் முச்சந்தி முஸ்லீம் மசூதிக்கு குன்மங்கலத்து, புள்க்கல் பூமிகள் வழங்கியது (முச்சந்திப் பள்ளி சாசனங்கள்)


முச்சுந்தி முஸ்லீம் மசூதி


சிதாறல்

C.E பத்து, பதினொன்று நூற்றாண்டுகளில் கேரளாவுக்கு வருகை தந்த அஸிரூனியும், C.E பதினைந்தாம் நூற்றாண்டில் வந்த அப்துர் ரசாக்கும் வழங்குகின்ற தகவல்களைக் கவனிக்கவும்.




கேரளாவின் கலாச்சார ஒருங்கிணைப்பில் வாணிபஉறவுகள் எவ்வாறு காரணமாகியது?

## சமூகக் கட்டுப்பாடுகள்

இடைக்காலத்தில் சமூக உறவுகளைக் கட்டுப்படுத்துவதற்காக நீதிகளும் சட்டங்களும் காணப்பட்டது. பெருமாள் காலத்தில் மூழிக்குளம் கச்சம் என்ற ஒரு சட்டம் காணப்பட்டது. பிராமணர்களும் கோயில்களும் அடங்கிய சமூகத்திற்குத்தான் இது பெரும்பாலும் உகந்ததாகக் காணப்பட்டது. நாட்டு நடவடிக்கைகளே பெருமாள் காலச் சமூகங்களைக் கட்டுப்படுத்தியிருந்தது. பெருமாள் காலத்திற்குப் பின்னர் கச்சங்கள் மறைந்து நாட்டு வழக்குகளும் நாட்டுச் சடங்குகளும் பிரபலமடைந்தது. அவை கீழ்மரியாதை என அறியப்பட்டிருந்தது.

- தேச மரியாதை
- தொழில் மரியாதை
- சொரூப மரியாதை
- சுத்த மரியாதை
- தொழிற்குழுக்கள் ஒருவருக்கொருவர் கடைபிடித்திருந்த ஜாதி மரியாதை

பொதுவாக மரியாதைகள் மீறப்படுவதில்லை. அவ்வாறு மீறப்பட்டால் அது கலவரத்திற்குக் காரணமாகும். மரியாதைகளை அடிப்படையாகக் கொண்டு தான் முன்னர் குறிப்பிட்ட நிலவுடமை உரிமைகளும் ஜாதி மத உறவுகள் எல்லாம் சமூகத்தில் காணப்பட்டது. இது தவிர நாடுவாழிகளின் காலத்தில் குற்றம் செய்தவர்களுக்குத் தண்டனை

### சத்தியசோதனைகள்

- **விஷச் சோதனை** – குற்றம் செய்தவரின் கையை விஷப்பாம்பின் கூட்டில் வைப்பது. பாம்பு கடித்தால் குற்றம் செய்ததாகக் கருதப்படும். .
- **நீர்ச் சோதனை** – குற்றம் செய்தவரை முதலையுள்ள குளத்தில் இறக்கிவிடுவது. முதலை பிடித்தால் குற்றம் செய்ததாகக் கருதப்படும்
- **நெருப்புச் சோதனை** – கொதித்த எண்ணெய் அல்லது நெய்யில் குற்றம் சாட்டப்பட்டவரின் கை விரலை வைத்தல். விரல் சுட்டால் குற்றம் செய்யப்பட்டுள்ளது எனக் கருதப்படும். சுசீந்திரம் கைமுக்குதல் அக்காலத்தின் புகழ் பெற்ற நெருப்புச் சோதனையாகும்
- **எடைச் சோதனை** – குற்றம் செய்த நபரை முதலில் தராசில் அமரச் செய்து எடை பார்த்த பின் அவர் செய்த குற்றங்கள் எழுதிய ஓலைகளை உடலோடு சேர்த்து வைத்து மறுபடியும் எடை பார்ப்பர். எடை முதலில் உள்ளதைவிடக் கூடினால் தண்டனை கிடைக்கும்.

வழங்குவதற்காக விஷச்சோதனை, நீர்ச் சோதனை, நெருப்புச் சோதனை, எடைச் சோதனை போன்ற சத்திய சோதனைகள் காணப்பட்டது. இதில் எடைச்சோதனை பிராமணர்கள் உட்பட்ட உயர்ந்தோர்களுக்கு நடத்தப்பட்டதாகும். பிற சோதனைகள் தாழ்த்தப்பட்ட ஜாதியினருக்கு வழங்கப்பட்டதாகும். இடைக்காலத்தில் அனைவருக்கும் சமமாக நீதி வழங்கப்படவில்லை. உயர்ந்தோர்களுக்கும் தாழ்த்தப்பட்டவர்களுக்கும் வழங்கப்பட்ட தண்டனைகளில் ஏற்றக் குறைவுகள் காணப்பட்டது.

ஆங்கிலேயர்களின் ஆட்சிக்காலம் வரையிலும் மேற்குறிப்பிட்ட நாட்டு வழக்கங்கள் தான் சமூகத்தில் காணப்பட்டது. பத்தொன்பதாம் நூற்றாண்டுடன் ஒருங்கிணைந்த சட்டங்கள் நடைமுறைக்கு வந்தது.



இடைக்கால சமூகத்தில் அனைவருக்கும் சமமான நீதி காணப்பட்டதா கலந்துரையாடவும்.

# மொழி, இலக்கியம், கலை, அறிவியல்

இடைக்கால கேரளாவின் மொழி, இலக்கியம், அறிவியல் போன்றவைகளைப் பற்றி முன் வகுப்புகளில் நம் கலந்துரையாடினோம் அல்லவா?

பழங்காலத்தில் கேரளம் தமிழகத்தின் பகுதியாக இருந்தது அல்லவா. இடைக்கால கேரளாவின் மலையாள மொழியில் தமிழ் மொழியின் தாக்கமும் சமஸ்கிருத மொழியின் செல்வாக்கும் காணப்பட்டது. ஒன்பதாம் நூற்றாண்டு முதல் வட்டெழுத்தில் எழுதப்பட்ட எழுத்து முறையில் இதுபோன்ற மலையாளம் காணப்பட்டது. முன்னர் குறிப்பிட்ட தரிசாப்பள்ளி, திருநெல்லி எழுத்து முறைகள் இதற்கு எடுத்துக்காட்டுகளாகும்.

பனிரெண்டாம் நூற்றாண்டு வரையிலான எழுத்து முறைகளில் இந்த வடிவிலான எழுத்துக்களைக் காண இயலும். அதற்குப் பின்னர் உள்ள எழுத்துக்களில் மலையாளத்தின் தாக்கம் அதிகரித்தது. பனிரண்டாம் நூற்றாண்டில் இயற்றப்பட்ட ராம சரிதம் மலையாளத்தின் ஆரம்ப கால இலக்கியப் படைப்பாகும். பதினாலாம் நூற்றாண்டுடன் மணிப்பிரவாள இலக்கியங்கள் இயற்றப்பட்டது. அக்காலத்தைய முக்கியமான மணிப்பிரவாள இலக்கியப் படைப்புகள் கீழே கூறப்படுபவையாகும்.

- உண்ணுநீலி சந்நேசம்
- உண்ணியட்சீ சரிதம்
- சந்திரோத்ஸவம்
- அனந்தபுர வர்ணனம்
- வைசிக தந்திரம்

பதினைந்தாம் நூற்றாண்டுடன் இத்தகைய இலக்கியங்களின் எழுத்து முடிவடைந்தது. பதினைந்தாம் நூற்றாண்



**மணிப்பிரவாளம்**

சமஸ்கிருதம் கலந்து மலையாளத்தில் இயற்றப்பட்ட இலக்கியப் படைப்புகளே மணிப் பிரவாளம் என அறியப்பட்டது. மலையாள மொழியில் சந்தேச காவியங்களும் சம்பு காவியங்களும் (உரைநடையும் செய்யுளும் கலந்த காவியங்கள்) இயற்றப்பட்டது.

டின் நிரணம் கவிஞர்கள் பிரிவைச் சார்ந்த ராமப்பணிக்கர் என்ற கண்ணசன் மலையாளத்தில் இயற்றிய இராமாயணம், பாகவதம், சிவராத்திரி மாகாத்மியம் போன்ற இலக்கியப் படைப்புகளும் மலையாள மொழியின் வளர்ச்சியில் முக்கிய பங்கு வகித்தது. அக்காலத்தில் இயற்றப்பட்ட மற்றொரு முக்கியமான படைப்பு செறுசேரியின் கிருஷ்ண காதயாகும்.

இடைக்கால இந்தியாவின் பக்தி இயக்கத்தைப் பற்றி முன் வகுப்புகளில் கலந்துரையாடியதை நினைவுகூர்வீர்கள் அல்லவா. பக்தி இலக்கியங்கள் மலையாளத்திலும் காணப்பட்டது. பதினேழாம் நூற்றாண்டில் பூந்தானம் நம்பூதிரி இயற்றிய ஞானப்பானா, கிருஷ்ண கர்ணாமிர்தம், துஞ்சத்து ராமானுஜன் எழுத்தச்சனின் அத்யாத்ம ராமாயணம் கிளிப்பாட்டு, மகாபாரதம் கிளிப்பாட்டு போன்றவை அக்காலத்தைய பக்தி இலக்கியங்களாகும். பதினெட்டாம் நூற்றாண்டில் குஞ்சன் நம்பியாரின் துள்ளல் பாட்டுகளும் ராமபுரத்து வாரியாரின் குசேல விருத்தம் வஞ்சிப்பாட்டும் மலையாள மொழி, இலக்கியத்தின் வளர்ச்சியில் முக்கிய பங்கு வகித்தது. வடக்கன் பாட்டு தெக்கன் பாட்டு போன்ற வாய்மொழிப் பாட்டுகளும் இக்காலத்தில் பிரபலமடைந்தது.

மலையாள மொழியின் வளர்ச்சியில் இடைக்கால இலக்கியப் படைப்புகள் வகித்த பங்கினைப் பற்றிக் கலந்துரையாடவும்.



## வாய்மொழிப் பாட்டுகள்



- **வடக்கன் பாட்டுகள்** – போர் வீரர்களைப் புகழும் பாடல்கள். தச்சோளி ஒதேனன் என்ற போர் வீரனைப் புகழும் தச்சோளிப் பாட்டும், ஆரோமல் சேகவரைப் புகழும் புத்தூரம் பாட்டும் இதில் முக்கியமானவைகளாகும்.
- **தெக்கன் பாட்டுகள்** – தேச வரலாறு, கல்யாணம், தேவதையாகக் கணக்கிடப்பட்டவர்கள், போர் வீரர்களின் புகழ்ச்சிகள், பேய்கள் போன்ற ஏராளமான தகவல்கள் தெக்கன் பாட்டுகளில் வருகிறது. இரவிக்குட்டிப் பிள்ளைப் போர்ப்பாடல், பஞ்சவங்காட்டு நீலிப்பாடல் போன்றவை எடுத்துக்காட்டுகளாகும்.
- **தோற்றம் பாட்டுகள்**– தெய்யம், திறை போன்ற சடங்குகளோடு தொடர்புகொண்ட பாடல்கள்
- **அறுவடைப்பாடல்கள்/நாற்று நடும் பாடல்கள்** – விவசாயத்தில் ஈடுபட்டவர்கள் கூட்டமாகப் பாடும் பாடல்கள்.
- **படைப்பாட்டுகள்** – படை நடத்துவது தொடர்பான பாடல்கள்

கேரளாவிற்குக் குடியேறிய பல்வேறு மக்கள் பிரிவினரின் பேச்சு மொழிகளும், முறைகளும் மொழியின் வளர்ச்சியில் பங்கு வகித்துள்ளது. கேரளாவின் தென் எல்லையில் வாழ்கின்ற மக்கள் பேசும் மொழியில் தமிழின் தாக்கமும் வட எல்லையில் வாழ்கின்ற மக்கள் பேசும் மொழியின் கன்னடத்தின் தாக்கமும் காணப்படுகிறது.


கடல் வழியாக வந்த குடியேற்றக்காரர்களுடையவும் வியாபாரிகளுடையவும் மொழியின் தாக்கமும் மலையாளத்தில் காணப்படுகிறது. அரேபியர்களின் தாக்கம் அரபி மலையாளம் என்ற வரைமொழியைத் தோற்றுவித்தது. பதினேழாம் நூற்றாண்டில் காசிமுகமதின் முஹ்யிதீன் மால அரபி மலையாளத்தில் இயற்றப்பட்டதாகும். கேரளாவுக்கு வந்த கிறிஸ்தவ மிஷனரிகளும் மலையாள மொழியில் நூற்களை இயற்றினர். பதினெட்டாம் நூற்றாண்டில் மிஷனரிகள் இயற்றிய நூற்கள் எவையெனப் பார்ப்போம்.

- ஸம்க்ஷேப வேதார்த்தம்
- அர்ணோஸ் பாதிரியின் புத்தன் பான
- பாறேமாக்கல் தோமாக் கத்தனாரின் வர்த்தமான புஸ்தகம்

கேரளாவுக்கே உரித்தான கலை வடிவங்கள் தோன்றியதும் இடைக்காலத்திலாகும். அக்காலத்தில் வளர்ச்சியைந்த சில கலை வடிவங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளது..


மோகினியாட்டம்


கதைகளி


ஓட்டன் துள்ளல்


தெய்யம்



படையணி


ஒப்பன


மார்கம்களி


தஃபுமுட்டு


பரிசமுட்டுக்களி


கூடியாட்டம்


சாக்கியார் கூத்து



சவிட்டு நாடகம்

ஆயுர்வேதம் கணிதவியல், வானவியல், கட்டிடக்கலை போன்ற துறைகளிலும் இடைக்காலத்தில் முன்னேற்றம் ஏற்பட்டது. கணிதத்திலும் வானவியலிலும் ஆழமான ஆய்வுகளும் சோதனைகளும் அக்காலத்தில் நடைபெற்றது. சங்கர நாராயணன், சங்கிரம மாதவன், வடசேரி பரமேஸ்வரன், நீலகண்ட சோமயாஜி போன்றவர்கள் அக்காலத்தைய முக்கியமான கணித வல்லுநர்களாவர்.

மலையாள மொழியிலுள்ள இலக்கியப் படைப்புகளும் மலையாளிகளுக்குச் சொந்தமான கலைவடிவங்களும் வளர்ச்சியடைந்ததும் சிறப்பம்சம் கொண்ட சமூகப் பொருளாதார நிறுவனங்கள் தோன்றியதும் அறிவியல் துறை வளர்ச்சியடைந்ததும் இடைக்காலத்திலாகும். சுருக்கமாக, கேரள நாகரீகத்தின் சிறப்பு அடையாளங்கள் தோன்றியது இடைக்காலத்திலாகும்.



கேரள நாகரீகத்தின் தோற்றத்தில் முக்கிய காலமே இடைக்காலம் – நிறுவுக.






## முக்கிய கற்றல் அடைவுகளில் உட்படுபவை

- காலனி ஆதிக்கத்திற்கு முன்னர் கேரளாவில் காணப்பட்ட ஆட்சி முறையைப் புரிந்துகொள்கின்றனர்.
- நிலத்தின் மீதான உரிமை எவ்வாறு தோன்றியது என விவரிக்கின்றனர்.
- வயலைப் போலவே தோட்டம், தோப்பு, மலைப்பகுதிகள் போன்றவை விவசாயப் பகுதிகளாக இருந்தன எனப் புரிந்துகொள்கின்றனர்.
- பாரம்பரியமான தொழிற்கூட்டங்கள் பிற்காலத்தில் எவ்வாறு ஜாதிகளாக மாறியது எனப் பகுப்பாய்வு செய்கின்றனர்.
- கேரளாவின் கலாச்சார ஒருங்கிணைப்பைக் கண்டுபிடிக்கின்றனர்.

- ஜாதியும் மதமும் பிரித்து கேரள சமூகத்தைப் பட்டியல்படுத்தி அரசாங்க ஆவணங்களில் குறிப்பிட்டது ஆங்கிலேயர்களின் காலனி ஆட்சிக் காலத்தில் எனப் புரிந்துகொள்கின்றனர்.
- இடைக்காலச் சமூகத்தின் சட்டங்களைப் புரிந்துகொள்கின்றனர்.
- மலையாள மொழி, இலக்கியம், கலைகள், அறிவியல் போன்றவற்றின் வளர்ச்சி பகுப்பாய்வுச் செய்யப்படுகிறது.
- மலையாளத்தைத் தாய்மொழியாகக் கொண்ட ஒரு பகுதியாகக் கேரளம் உருவானது இடைக்காலத்தில் எனக் கண்டுபிடிக்கின்றனர்.

## மதிப்பிடலாம்

- இடைக்காலக் கேரளத்தின் ஒரு ஆட்சியமைப்பைப் பற்றி குறிப்பு தயாரிக்கவும்.
- விவசாய கிராமங்களின் வளர்ச்சி ஜாதி சமூகத்தை எவ்வாறு தோற்றுவித்தது என மதிப்பிடவும்.
- கேரளாவின் கலாச்சார ஒருங்கிணைப்பிற்கு வாணிப உறவுகள் எந்த அளவுக்கு உதவியாக இருந்தது என மதிப்பிடவும்.
- மலையாள மொழியும் இலக்கியமும் கலை வடிவங்களும் அறிவியலும் இடைக்காலத்தில் தான் வளர்ச்சியடைந்தது. நிறுவுக.

## தொடர் செயல்பாடுகள்

- இடைக்கால கேரளத்தின் அரசியல் நிலப்படம் தயாரிக்கவும்.
- கேரளாவின் வேளாண் உற்பத்திப் பொருட்களைப் பற்றியும் அத்துடன் தொடர்புடைய தொழிற்கூடங்கள் பற்றியும் அவர்களின் பழங்குடி இன வாழிடங்களின் பெயர்களைப் பற்றியும் தேடல் நடத்திக் குறிப்பு தயாரிக்கவும்.
- இடைக்கால வாணிப உறவுகள் கலாச்சார ஒருங்கிணைப்பிற்கு எவ்வாறு காரணமாகியது எனத் தொடர் தேடல் நடத்தவும்.
- மலையாள இலக்கியத்திற்கு இடைக்காலத்தில் ஏற்பட்ட வளர்ச்சியைப் பற்றி நூலகத்தின் துணையுடன் அதிக தேடல் நடத்தி ஒரு கட்டுரை தயாரிக்கவும்.
- வட்டார வழக்கிலுள்ள வாய்மொழிப் பாட்டுகளும் கதைகளும் சேகரிக்கவும்.
- இடைக்கால கலை வடிவங்களின் படங்களைச் சேகரித்து ஐஇப வாய்ப்புகளைப் பயன்படுத்தி டிஜிட்டல் படத்தொகுப்பு தயாரிக்கவும்.



அலகு

# 07

# தேர்தலும் மக்களாட்சியும்

## முதல் வாக்காளர் நெகி இன்று மீண்டும் வாக்குச்சாவடிக்கு

**கின்னார்(இமாச்சலபிரதேசம்) :** இமாச்சலபிரதேசத்தில் உள்ள கின்னாரில் கல்ப என்ற ஒரு வக்குச்சாவடியில் ஒரு விஜபி வாக்காளரைக் காத்திருந்தனர். சியம்சாரண் நெகி என்ற 97 வயதுடைய வாக்காளரை. 1951 அக்டோபர் 25-ஆம் தேதி அவர் அளித்த வாக்குரிமை தான் சுதந்திர அந்தியாவின் முதல் தேர்தல் 1952-இல் நடைபெற்றது. ஆனால் கடல்மட்டத்திலிருந்து2759 மீட்டர் உயரத்தில் எப்போதும் பனி பொழிந்து கொண்டிருக்கின்ற கின்னாரில் ஆறு மாதத்திற்கு முன் தேர்தல் நடத்துவதற்கு அரசு தீர்மானித்தது. அவ்வாறு நெகி முதலாவது வாக்குரிமை அளிக்கவும் அது வர



லாற்றில் இடம் பிடிக்கவும் செய்தது. சுதந்திரம் கிடைத்ததின் ''இது ஆவேசம் தான் அன்றெல்லாம் எங்களுக்கு வாக்களித்து திரும்பிய போது எல்லையில்லாத மகிழ்ச்சியும் பெருமிதமும் இருந்தது. அதற்குப் பின் 27 தேர்தல்களில் வாக்களித்த இவர் இந்த முறையும் தன்னுடைய வாக்குரிமையை வீணாக்கவில்லை என்ற திடநம்பிக்கையில் உள்ளார். 2014- இல் மக்கள் சபை தேர்தலில் நெகி பிரச்சாரம் செய்கின்ற அம்பாசிடர் ஆக இருந்தார். உடலும் முகமும் சுருக்கம் வீழ்ந்து மடங்கினாலும் இளம் தலைமுறையினரிடம் அவருக்குக் கூறவேண்டியது இதுதான். “வாக்குரிமைகள் அளிக்காமல் இருக்கக் கூடாது. நாட்டுக்கு நாம் செய்ய வேண்டிய கடமையாகும் இது”.

இந்தியாவில் முதல் வாக்காளரான சியாம்சன் நெகி வாக்காளர்களுக்கும் வழங்கும் செய்தியே மேலே கொடுக்கப்பட்டுள்ள பத்திரிக்கைச் செய்தியில் உள்ளது. தேர்தலில் வாக்குரிமை அளிக்க வேண்டியதன் முக்கியத்துவத்தைக் குறித்து நெகியின் வார்த்தைகளிலிருந்து புரிந்ததல்லவா? மக்களாட்சி நாடுகளில் குறிப்பிட்ட இடைவெளியில் தேர்தல் நடைபெறுவது வழக்கம். மக்களாட்சி அமைப்பில் மக்கள் பிரதிநிதிகளைத் தேர்வு செய்வதற்கான அமைப்பே தேர்தல். தேர்தல் இல்லாமல் மக்களாட்சி அமைப்பு நிலைநிற்பதில்லை.

மக்களாட்சியில் தேர்தலுக்கான முக்கியத்துவத்தை ஆராயுங்கள்.

- தேர்தல்கள் மக்கள் ஆர்வத்தைப் பிரதிபலிக்கிறது.
- தேர்தல் வழியாக மக்கள் விரும்புகின்ற ஆட்சியாளர்களைத் தேர்வு செய்ய முடிகிறது.
- மக்களுக்கு மக்களாட்சி செயல்முறையில் பங்கேற்கவும் பிரதிபலிக்கவும் முடிகிறது.
- ஆட்சியாளர்கள் மக்கள் விரும்பம் அறிந்து செயல்படுவதற்கு தேர்தல் காரணமாகிறது.



**தேர்தல்கள் மக்களாட்சியில் இன்றியமையாதது நிறுவவும்?**

மக்களாட்சியில் தேர்தலுக்கான முக்கியத்துவம் குறித்து புரிந்துகொண்டீர்கள் அல்லவா? உலகில் பெரும்பான்மையான நாடுகளும் மக்களாட்சியைப் பின்பற்றுகிறது. ஆனால் இந்த நாடுகளில் பின்பற்றுகின்ற தேர்தல் முறைகளும் அமைப்புகளும் மாறுபட்டதாகும். சில நாடுகளில் வெளிப்படையான தேர்தலும், வேறு சில நாடுகளில் மறைமுகத் தேர்தலும் பின்பற்றப்படுகின்றன. மக்களாட்சி நாடான இந்தியாவில் பல்வேறு உறுப்பினர் சபைகளுக்குக் கையாளப்படுகின்ற தேர்தல் முறைகளை கீழே கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையில் உற்றுநோக்கவும்

**தேர்தல் முறைகள்**

- வெளிப்படை தேர்தல்
  - மக்கள் சபை
  - மாநிலச் சட்டசபை
  - வட்டார உள்ளாட்சி நிறுவனங்கள்
- மறைமுகமான தேர்தல்
  - ஜனாதிபதி
  - துணை ஜனாதிபதி
  - மக்கள் சபை



**இரகசிய வாக்குச்சீட்டு(Secret Ballot)**

இந்தியாவில் தேர்தல்களில் வாக்காளர்கள் வாக்குரிமை அளிப்பது இரகசிய வாக்குச்சீட்டு வழியாகும். இதன் வழியாகப் பிறருக்கு அறியாமல் வாக்குரிமை அளிக்க முடிகிறது. வாக்காளர்களுக்கு வழங்கப்படுகின்ற வாக்குச்சீட்டில் அவர் விரும்புகின்ற வேட்பாளருக்கு வாக்குரிமையை அளிக்கின்றார்.

மக்கள் சபையிலும் , மாநில சட்டசபைகளிலும், பஞ்சாயத்து நகர சபைகளிலும் உள்ள உறுப்பினர்களை நாம் எவ்வாறு தேர்வு செய்தோம். வாக்குரிமை வயது வரம்பின் அடிப்படையில் வாக்காளர்கள் நேரடியாக அவர்களுடைய உறுப்பினர்களைத் தேர்வு செய்கின்றனர். இந்த முறையை வெளிப்படையான தேர்தல் முறை என்று கூறுவர்.

ஆனால் ஜனாதிபதி, துணை ஜனாதிபதி மாநில சபை உறுப்பினர்கள் ஆகியோரது தேர்தலில் மக்கள் நேரடியாகப் பங்கேற்பதுண்டா? மக்கள் தேர்வு செய்த மக்கள் பிரதிநிதிகள் இவர்களைத் தேர்வு செய்கின்றனர். இவ்வாறு தேர்வு செய்யப்பட்ட மக்கள் பிரதிநிதிகள் வாக்குரிமை அளித்து உறுப்பினர்களைக் கண்டுபிடிக்கும் முறை

வெளிப்படையான மறைமுகமான தேர்தலுக்குச் சில எடுத்துக்காட்டுகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளது. கூடுதல் எடுத்துக்காட்டுகளைக் கண்டுபிடித்து அட்டவணைப்படுத்தவும்



| வெளிப்படையான தேர்தல் | மறைமுகமான தேர்தல் |
|---|---|
| • வகுப்பு பிரதிநிதி | • பள்ளிக்கூட சேர்மன் |
| • பஞ்சாயத்து உறுப்பினர் | • பஞ்சாயத்து தலைவர் |
| • | • |
| • | • |
| • | • |


# அறுதிப் பெரும்பான்மை அமைப்பு

வெளிப்படையான மறைமுகமான தேர்தல் முறைகளைத் தெரிந்து கொண்டீர்கள் அல்லவா? இந்தியாவின் வெளிப்படையான தேர்தல் முறையை பின்பற்றுகின்ற மக்கள்சபை, மாநில சட்டசபைகள், பஞ்சாயத்து நகர சபைகள் ஆகியவற்றிற்கான தேர்தலில் அறுதிப் பெரும்பான்மை முறையை நாம் கையாளுகிறோம். இந்த முறையின் படி தேர்தல் நடத்துவது கீழே கூறப்பட்டுள்ள முறையிலாகும்.

- ஒரு தொகுதியிலிருந்து ஒரு உறுப்பினரைத் தேர்வு செய்கின்றனர்.
- எத்தனை வாக்காளர்கள் வேண்டுமானாலும் போட்டியிடலாம்.
- பிற வாக்காளர்களை விடக்கூடுதல் வாக்குரிமைகள் கிடைக்கும் நபர் தேர்ந்தெடுக்கப்படுவார்.

மக்களவை மாநிலங்களவைத் தேர்தலில் ஒரு தொகுதியிலிருந்து போட்டியிடுகின்ற வேட்பாளர்களில் மிக அதிக வாக்குரிமை கிடைக்கும் நபரை வெற்றி பெற்றவராக கூறுகின்ற மிக எளிமையான ஒரு முறைதான் அறுதிப்பெரும்பான்மை முறை.

அறுதிப் பெரும்பான்மை அமைப்பின் சிறப்புகளைப் புரிந்து கொள்வதற்கு வகுப்பில் ஒரு மாதிரித் தேர்தல் நடத்தவும்.





# சரிசமவீத பிரதிநிதித்துவ அமைப்பு

இந்தியாவில் மறைமுகமான தேர்தல் முறையைப் பின்பற்றுகின்ற ஜனாதிபதி, துணைஜனாதிபதி தேர்தல்களில் சரிசம வீத பிரதிநிதித்துவ அமைப்பை நாம் பின்பற்றுகிறோம். இந்தியாவில் மாநிலங்களிலிருந்து மாநிலங்களவைக்கான உறுப்பினர்களைத் தேர்வு செய்வது மாநிலங்களிலுள்ள சட்டமன்ற உறுப்பினர்களாவர்.

மாநில சட்ட உருவாக்கச் சபையில் ஒவ்வொரு அரசியல் கட்சிகளுக்கும் உள்ள ஆள்பலத்திற்குப் பொருத்தமாக அவர்களுக்கு மாநிலங்களவை உறுப்பினர்களைத் தேர்வு செய்ய முடியும்.

## தொகுதிகள்




கேரளத்திலுள்ள மக்களவைத் தொகுதிகளுடையவும், காசர்கோடு மாவட்டத்திலுள்ள மஞ்சேஸ்வரம் சட்டசபை தொகுதியினுடையவும் நிலப்படம் கொடுக்கப்பட்டுள்ளது. நமது மாநிலத்திலிருந்து மக்களவைக்குத் தேர்வு செய்யப்படுகின்ற பாராளுமன்ற உறுப்பினர்களும், சட்டசபைக்கு தேர்வு செய்யப்படுகின்ற சட்டமன்ற உறுப்பினர்களும் ஒரே தொகுதியில் உள்ளவர்களா? வெவ்வேறு தொகுதிகளின் பிரதிநிதிகளாக இருப்பார்கள். மக்கள் பிரதிநிதிகளைத் தேர்வு செய்வதற்கு ஒவ்வொரு மாநிலத்தையும், மத்திய ஆட்சி பிரதேசங்களையும் சிறிய நிலப்பகுதிகளாப் பிரிக்கப்பட்டுள்ளது. இந்த நிலப்பகுதிகள் தான் தொகுதிகள். எல்லா தொகுதிகளிலும் ஏறக்குறைய ஒரே மக்கட்தொகை காணப்படும். மக்ளைவைத் தேர்தலுக்காக நமது நாடு மக்கட்தொகை அடிப்படையில் 543 தொகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. ஒரு தொகுதியிலிருந்து ஒரு உறுப்பினரை நாம் தேர்வு செய்கிறோம். அதைப்போன்று மாநிலத்திற்கும் மக்கள்தொகை அடிப்படையில் சட்டசபைத் தொகுதிகள் உள்ளன. நமது மாநிலத்தில் இப்போது 20 மக்களவைத் தொகுதிகளும் 140 சட்டசபைத் தொகுதிகளும் உள்ளன.



**கேரளத்தில் நடைமுறையிலுள்ள மக்களைவைத் தொகுதிகளின் பெயர்களை நிலப்படத்திலிருந்து கண்டுபிடித்து அட்டவணைப்படுத்தவும்.**

## ஒதுக்கீட்டுத் தொகுதிகள்

மக்களவை,சட்டசபைத் தேர்தல்களில் நாம் அறுதிப் பெரும்பான்மையைப் பின்பற்றுவதால் பெரும்பான்மைப் பிரிவினர் எல்லா தொகுதிகயிலும் வெற்றி பெறுவதற்கு வாய்ப்பு உள்ளது. ஆனால் சமூகத்தில் தாழ்த்தப்பட்டவர்களுடையவும், ஒதுக்கப்பட்டவர்களுடையவும் பிரதிநிதித்துவத்தை மக்களவையிலும் மாநில சட்டசபைகளிலும் இத்தகைய பிரிவினரின் பிரதிநிதித்துவத்தை உறுதி செய்வதற்காக

ஒதுக்கீட்டுத் தொகுதிகள் என்ற திட்டத்தை நடைமுறைப்படுத்தினர். இதன்படி இந்தியாவில் பிற்படுத்தப்பட்ட பிரிவினருக்கும், மிகவும் பிற்படுத்தப்பட்ட பிரிவினருக்கும் மக்களவையிலும், மாநில சட்டசபைகளிலும் மக்கள்தொகை அடிப்படையில் இடங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டத் தொகுதிகளில் அந்த சமுதாயத்தைச் சார்ந்தவர்களுக்கு மட்டுமே போட்டியிட முடியும். ஆனால் எல்லாப் பிரிவிலுள்ள மக்களுக்கு வாக்குரிமை அளிப்பதற்கு இயலும். மக்களவையில் 84 இடங்கள் பிற்படுத்தப்பட்டோருக்கும் 47 இடங்கள் மிகவும் பிற்படுத்தப்பட்டோருக்கும் இப்போது ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.


பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் ஆகியோருக்கு வழங்கப்பட்டுள்ள ஒதுக்கீடு, பிற ஒதுக்கப்பட்ட பிரிவினருக்கும் பெண்களுக்கும் வழங்க வேண்டுமா? குறிப்பிட்ட கருத்துடன் தொடர்புபடுத்தி வகுப்பில் ஒரு கலந்துரையாடல் நடத்தவும்.



## சுதந்திரமும் நீதிசார்ந்ததுமான தேர்தல்

சுதந்திரமும் நீதிசார்ந்ததுமான தேர்தல் முறை தேர்தல்களை எளிமையும் நடுநிலை உடையதுமாக்குவதற்கு இன்றியமையாதது ஆகும். இந்த இலக்கை முன் வைத்து இந்திய அரசியலமைப்பில் உட்படுத்தப்பட்டுள்ள அமைப்புகள் தான் வயது வந்தோர் அனைவருக்கும் வாக்குரிமை, தேர்தலில் போட்டியிடும் உரிமை, சுதந்திர தேர்தல் குழு ஆகியவை .

## வயது வந்தோர் அனைவருக்கும் வாக்குரிமை




கொடுக்கப்பட்டுள்ள அறிவிப்பை வாசித்தீர்கள் அல்லவா? ஸ்ரீ மூலம் பிரஜாசபை தேர்தலில் வாக்குரிமை குறித்து என்னென்ன குறிப்புகள் அறிவிப்பிலிருந்து கிடைக்கிறது?

- 
- 
- 

திருவிதாங்கூரில் முன்பு நடைமுறையிலிருந்த வாக்களிப்பின் விதிமுறைகளைத் தெரிந்து கொண்டீர்களல்லவா? இன்று வாக்களிப்பதற்கான நிபந்தனை என்ன? நமக்கு ஆராய்வோம்.




படத்தை உற்றுநோக்குங்கள். நாட்டில் வாக்காளர்கள் வாக்குரிமை அளிப்பதற்காக வரிசையாக நிற்கின்றனர். வாக்களித்து உறுப்பினர்களைத் தேர்வு செய்வதற்கான உரிமைதான் வாக்குரிமை. உறுப்பிர்களைத் தேர்வு செய்பவர்கள் வாக்காளர்கள் (Electors) என்ற பெயரில் அறியப்படுகின்றனர். மக்களாட்சி ஆட்சிமுறையில் குடிமகனின் பங்களிப்பை உறுதி செய்வதற்கான மிகச் சிறந்த வழி வாக்குரிமையாகும். இன்று இந்தியாவில் வாக்குரிமை எங்கும் உள்ளது.

ஜாதி- மத- இன- மொழி- பால்- வட்டார வேற்றுமைகளின்றி வயது வரம்பு நிரம்பிய அனைவருக்கும் தேர்தலில் வாக்களிப்பதற்கான உரிமைதான் வயது வந்தோர் அனைவருக்கும் வாக்குரிமை. பதினெட்டு வயது நிரம்பிய அனைவருக்கும் இந்தியாவில் வாக்குரிமை அளிப்பதற்குத் தகுதியுண்டு.



## அனைவருக்கும் வாக்குரிமை

- 1950 ஜனவரி 26 அரசியலமைப்புச் சட்டம் நடைமுறைக்கு வந்தது முதல் வயது வந்தோர் அனைவருக்கும் வாக்குரிமை நடைமுறைக்கு வந்தது.
- அரசியலமைப்பு பிரிவு 326 வயது வந்தோர் அனைவருக்கும் வாக்குரிமையைக் குறிக்கிறது.
- 1989 வரை வாக்குரிமைக்கான வயது வரம்பு 21 ஆக இருந்தது.
- 1989- இல் 61- ஆம் அரசியலமைப்பு சீர் திருத்தம்- வாக்களிக்கும் வயது 21 வயதிலிருந்து 18 வயதாக குறைக்கப்பட்டது.



**வயது வந்தோர் அனைவருக்கும் வாக்குரிமையில் நடைமுறையிலுள்ள நிபந்தனைகளை மாற்ற வேண்டுமா? இதைக் குறித்து வகுப்பில் விவாதம் நடத்தவும்.**



## மாறுகின்ற வாக்களிப்பு முறைகள்



ஆரம்ப கால வாக்களிப்பு முறையில் இன்று பல மாற்றங்களும் வந்துள்ளன. ஒவ்வொரு வேட்பாளர்களுடையவும் பெயரும் தேர்தல் சின்னமும் குறிப்பிடுகின்ற தனித்தனி வாக்குச் சீட்டு பெட்டிகள் வாக்குச்சாவடியில் ஒழுங்கு செய்யவும், வாக்காளர்கள் தங்களுக்குக் கிடைக்கின்ற வெறுமையான வாக்குச் சீட்டை விருப்பமுள்ள வாக்காளர்களின் வாக்குப் பெட்டியில் போடுகின்ற வாக்களிப்பு முறையை முதல் இரு பொதுத்தேர்தல்களில் பின்பற்றினர்.

வாக்காளர்கள் விரும்புகின்ற வேட்பாளருக்கு வாக்குச்சீட்டில் வாக்களித்து வாக்குச் சாவடியில் வைக்கப்பட்டுள்ள வாக்குப் பெட்டியில் போடும் முறை இரண்டாம் பொது தேர்தலுக்கு பின்பு 40 வருடம் பின் தொடரப்பட்டது.

1990- இன் இறுதியில் தேர்தல் கமிஷன் மின்னணு வாக்களிப்பு இயந்திரத்தைக் கொண்டு வந்தது.



கேரளத்தில் இந்த முறை முதன் முதலாகப் பயன்படுத்தப்பட்டது. இன்று நாட்டில் நடைபெறுகின்ற எல்லா தேர்தல்களிலும் மின்னணு இயந்திரம் பயன்

# தேர்தலில் போட்டியிடுவதற்கான உரிமை

தேர்தலில் போட்டியிடுவதற்கும், மக்கள் உறுப்பினராவதற்கும் எல்லா குடிமக்களுக்கும் உரிமை உண்டு. மக்கள் பிரதிநிதித்துவ சட்டப்படி வாக்களிப்பு பட்டியலில் பெயர் பதிவு செய்யப்பட்டுள்ள எந்த ஒரு இந்திய குடிமகனும் பிற தகுதிகள் இல்லாவிட்டாலும் தேர்தலில் போட்டியிடலாம். போட்டியிடுவதற்கு குறைந்த வயது வரம்பு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. பல்வேறு தேர்தல்களில் போட்டியிடுவதற்கான வயது அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளது.

| தேர்தல் | வயதுவரம்பு |
|---|---|
| • ஜனாதிபதி | 35 |
| • துணை ஜனாதிபதி | 35 |
| • ராஜ்யசபை | 30 |
| • லோக்சபை | 25 |
| • சட்டசபை | 25 |
| • பஞ்சாயத்துகள் | 21 |
| • நகரசபைகள் | 21 |

# சுதந்திரமான தேர்தல் ஆணையம்

மக்களாட்சி சிறப்படைய வேண்டுமெனில் தேர்தல்கள் சுதந்திரமும் நடுநிலைமையும் உடையதாக அமைய வேண்டும். அது நிறைவேற வேண்டுமெனில் தேர்தல் ஆணையம் ஒரு சுதந்திர நிறுவனமாக இருக்க வேண்டும். இந்திய அரசியலமைப்புச் சட்டம் சுதந்திர தேர்தல் ஆணையத்துக்கு உருவம் கொடுத்தது.



*சுகுமார் சென்*
*முதல் தேர்தல் ஆணையர்*

இந்தியத் தேர்தல் ஆணையம் இப்போது மூன்று பேர் அடங்கும் ஒரு குழுவாகும். ஒரு முக்கிய தேர்தல் ஆணையரும் பிற இரு ஆணையர்களும் ஆவர். ஜனாதிபதி இவர்களை நியமிப்பார். தேர்தல் ஆணையத்துக்கு உதவிசெய்ய எல்லா மாநிலத்திலும் முக்கிய தேர்தல் அதிகாரிகள் உள்ளனர். தேர்தல் நடத்துவதற்கு விரிவான அதிகார வளையம் தேர்தல் ஆணையத்திற்கு இல்லை. தேவைப்பட்டால் மத்திய மாநில அரசு அதிகாரிகளைத் தேர்தல் வேலைக்கு நியமிப்பர். ஜனாதிபதி. துணை ஜனாதிபதி, மாநிலங்களவை, மக்களவை, மாநில சட்டசபை தேர்தல்களை நடத்துவது இந்திய தேர்தல் ஆணையமாகும்.




*இந்தியத் தேர்தல் ஆணைய அலுவலகம்*




## மாநில தேர்தல் ஆணையம்

வட்டார உள்ளாட்சி அமைப்புகளுக்கான தேர்தலுக்கு தலைமை வகிப்பது மாநிலத் தேர்தல் ஆணையமாகும். 73, 74 அரசியலமைப்பு திருத்தத்தின் வழியாக எல்லா மாநிலங்களிலும் தேர்தல் ஆணையம் உருவாக்கப்பட்டது. பஞ்சாயத்து- நகராட்சி நிறுவனங்களுக்கான தேர்தலை நடத்துவதே மாநிலத் தேர்தல் ஆணையத்தின் பொறுப்பு


கொடுக்கப்பட்டுள்ள செய்தித் துணுக்குகளைக் கவனியுங்கள். தேர்தல் குழு நடத்தும் பல்வேறு செயல்பாடுகளைக் குறித்த குறிப்புகளாகும். குறிப்புகளை ஆராய்ந்து தேர்தல் செயல்முறையில் தேர்தல் ஆணையம் வகிக்கும் பொறுப்புகளை வகுப்பில் விவாதித்து குறிப்பு தயாரியுங்கள்.

உங்கள் கண்டுபிடிப்புகள் கீழே கொடுக்கப்பட்டுள்ள தேர்தல் குழுவின் பொறுப்புகளுடன் தொடர்புபடுத்தி பகுப்பாய்வு செய்யுங்கள்.

### தேர்தல் குழுவின் பொறுப்புகள்

- தேர்தலுக்கு மேற்பார்வை வகித்தல்.
- வாக்காளர் பட்டியல் தயாரித்தல்
- தேர்தல் பலவேறு கட்டங்களின் நாள் குறித்தல்
- தேர்தல் சின்னங்களை வழங்குதல்
- ஒழுங்குமுறைச் சட்டம் உருவாக்குதல்
- தேர்தல் அதிகாரிகளின் நியமனமும் பயிற்சியும்
- வாக்களிப்பு, வாக்கு எண்ணிக்கை, தேர்தல் முடிவு வெளியிடுதல்
- தேர்தல் கணக்குகளை ஆராய்தல்

வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்த்தல், நீக்கம் செய்தல் போன்ற நடவடிக்கைகளைக் கூடுதலாகப் புரிந்து கொள்வதற்கு உங்கள் வட்டாரத்திலுள்ள BLO(Booth Level Officer). அணுகி தகவல்களைச் சேகரித்து வகுப்பில் வெளியிடுங்கள்.



## இந்தியத் தேர்தல் முறையின் குறைபாடுகள்

தேர்தல் செயல்முறை சுதந்திரமும் நீதிசார்ந்ததுமாக மாற்றுவதற்கு நாம் கைகொண்ட நடவடிக்கைகளைக் குறித்து புரிந்து கொண்டீர்களல்லவா? ஒரு தேர்தல் முறைக்கு முழுமையாகக் குறைபாடுகளில்லாமல் இருக்க இயலாது. இந்தியத் தேர்தல் முறைக்குச் சில குறைபாடுகள் உள்ளன. கீழே கொடுக்கப்பட்டுள்ள சார்ட்டைக் கவனியுங்கள்.

**பணத்தின் தாக்கம்**
- தேர்தலில் வாக்காளர்களுக்குப் பணம் கொடுத்து தாக்கம் செலுத்துகின்றனர்.
- தேர்தல் பிரச்சாரச் செயல்களில் அரசியல் கட்சிகள் ஒழுங்கின்றி நன்கொடைகள் பெற்றுக்கொள்கிறது.

**தேர்தல் சார்ந்த கலவரங்கள்**
- வாக்களிப்பு அன்று நடைபெறும் கலவரங்கள்.
- தேர்தலில் கள்ள ஓட்டுப் போடுதல்

**ஜாதி மத சக்திகளின் தாக்கம்**
- வேட்பாளர்களை நிர்ணயிப்பதில் ஜாதி மத காரணிகள் தாக்கம் செலுத்துகிறது.

**பெண்களின் குறைவான பங்களிப்பு**
- வேட்பாளரை நிர்ணயிப்பதில் பெண்கள் ஒதுக்கப்படுகின்றனர்.
- பாராளுமன்றத்திலும், சட்டசபையிலும் பெண்களின் பிரதிநிதித்துவம் குறைவு.

தேர்தல் காலங்களில் உள்ள பத்திரிக்கைச் செய்திகளைச் சேகரித்து தேர்தல் முறையில் உள்ள குறைபாடுகளைக் குறித்து குறிப்பு தயாரிக்கவும்.



## தேர்தல் சீர்திருத்தங்கள்

தேர்தல் முறையின் குறைபாடுகளே தேர்தல் சீர்திருத்தங்களுக்குக் காரணமானது. குறைபாடுகளைத் தீர்வு கண்டு எவ்வாறு தேர்தல் முறையைச் சீரமைக்க இயலும். தேர்தல் முறையின் குறைபாடுகளைத் தீர்ப்பதற்குத் தேர்தல் ஆணையம் நடைமுறைப்படுத்திய சில சீர்திருத்தங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

- வாக்காளர்களின் புகைப்படம் ஒட்டிய வாக்காளர் அட்டை நடைமுறைப் படுத்தப்பட்டது.
- வேட்பாளார்களின் தேர்தல் செலவுக்கான எல்லை நிர்ணயிக்கப்பட்டது.
- அரசியல் கட்சிகளுக்கும் வேட்பாளர்களுக்கும் உள்ள ஒழுங்குமுறைச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது.

KT-539-4/Soc. Sci. I-9 (T) Vol-2

- தேர்தல்களில் மின்னனு இயந்திரம் நடைமுறைப்படுத்தப்பட்டது.
- வாக்காளர்களின் புகைப்படம் ஒட்டிய வாக்காளர் பட்டியல் வெளியிடப்பட்டது.
- மறுப்பு வாக்களித்தலை நடைமுறைப்படுத்துதல்.
- வாக்குச் சீட்டில் வேட்பாளரின் அடையாளங்களை உட்படுத்தினர்.

### மறுக்கப்பட்ட வாக்கு

தேர்தலில் போட்டியிடுகின்ற எல்லா வேட்பாளர்களையும் புறக்கணிப்பதற்கு உரிமை வழங்கும் மறுக்கப்பட்ட வாக்கு இந்தியாவில் நடைமுறைக்கு வந்தது. மின்னனு இயந்திரத்தில் வேட்பாளர்களின் பெயர்களுக்கு கீழே கடைசியாக உட்படுத்தப்பட்ட NOTA (None of the Above) பட்டனை அழுத்தினால் இனி மறுக்கப்பட்ட வாக்கை அளிக்க முடியும்.

### வாக்குச் சீட்டில் வேட்பாளரின் புகைப்படம்

வாக்குச் சீட்டில் வேட்பாளரின் புகைப்படமும் வெளியிடுவதற்கு தேர்தல் ஆணையம் தீர்மானித்தது. வேட்பாளர்களுக்கு எதிராக அதே பெயர் உள்ள வேறு நபர்கள் பெருகி வருவதைத் தொடர்ந்துதான் தேர்தல் ஆணையத்தின் புதிய திட்டம். எழுத்தறிவில்லாத வாக்காளர்களுக்கும் அவர்களுடைய வாக்குரிமையைச் சரியாக உபயோகிப்பதற்கு இத்தகைய மாற்றங்கள் உதவி செய்யும்.

தேர்தல் சீர்திருத்தத்திற்கான கூடுதல் செயல்சார்ந்த அறிவுரைகளைக் கண்டுபிடித்து அட்டவணைப்படுத்துங்கள்.

## தேர்தலும் அரசியல் கட்சிகளும்

தேர்தலிலும், தேர்தல் செயல்முறைகளிலும் மிக அதிகமாகப் பங்கேற்பது அரசியல் கட்சிகளாகும். மக்களாட்சி அமைப்பின் பிரிக்க முடியாத காரணிகள் தான் அரசியல் கட்சிகள். அவைகளின் முக்கிய பொறுப்புகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

### தேர்தல் அறிக்கை


ஒவ்வொரு அரசியல் கட்சியும் தேர்தல் பிரச்சாரத்திற்காக தேர்தல் அறிக்கையை (Election manifesto) வெளியிடுவதுண்டு. கட்சியின் மாநில, தேசிய, சர்வதேச பிரச்சனைகளில் அவர்களின் கருத்துகள், ஆட்சிக்கு வந்தால் நடைமுறைப்படுத்த நினைக்கும் திட்டங்களும் செயல்களும் உட்படுத்தப்பட்ட ஒரு எளிய அறிக்கையாகும்.

- அரசாங்கத்தையும் மக்களையும் இணைத்தல்.
- பொதுமக்கள் கருத்து உருவாக்குதல்.
- அரசியல் விழிப்புணர்வு ஏற்படுத்துதல்
- தேர்தலில் போட்டியிட்டு பெரும்பான்மை கிடைக்கின்ற கட்சிகள் அரசை உருவாக்குதல்.

- தேர்தலில் போட்டியிட்டு பெரும்பான்மை கிடைக்காத கட்சிகள் எதிர்கட்சியா கச் செயல்படுதல்.
- அரசின் தவறான கொள்கைகளில் மாற்றம் செய்வதற்கு செயல்படுதல்.
- பல்வேறு கொள்கைகளும் திட்டங் களும் முன்வைத்தல்.

மக்களாட்சி நடைமுறையில் எந்த பிரிவிற் கும் அரசியல் கட்சிகளை உருவாக்குவதற் கான சுதந்திரம் உண்டு.

இந்தியாவில் தற்போது செயல் பட்டுக் கொண்டிருக்கின்ற அரசி யல் கட்சிகளின் அட்டவணையை உருவாக்குங்கள்.



**இந்தியாவின் அரசியல் கட்சிகள்**

| தேசிய கட்சிகள் | மாநிலக் கட்சிகள் |
|---|---|
| • | • |
| • | • |
| • | • |
| • | • |

நம்முடைய நாட்டில் செயல்பட்டுக் கொண்டிருக்கின்ற எல்லா அரசியல் கட்சிகளும் தேர்தல் ஆணையத்தில் பதிவு செய்ய வேண்டும். தேசிய கட்சிகளும், மாநில வட் டார கட்சிகளும் இந்தியாவில் செயல்படுகிறது. ஒரு அர சியல் கட்சியைத் தேசிய கட்சியாகவோ, மாநிலக் கட்சி யாகவோ அங்கீகரிப்பதற்குத் தேர்தல் ஆணையம் சில குறிப்பிட்ட விதிமுறைகளை நிர்ணயித்துள்ளது.

பொதுவாக நாடு முழுவதும் செயல்படுவதும் ஒன்றிற்கு அதிகமான மாநிலங்களில் செல்வாக்கு உள்ள கட்சிகளே தேசியக் கட்சிகள். ஆனால் சில மாநிலங்களில் மட்டும் உறுப்பினர்கள் உள்ள அரசியல் கட்சிகளே மாநிலக் கட் சிகள். இவற்றைப் பொதுவாக வட்டாரக் கட்சிகள் எனவும் கூறலாம். தேசிய, மாவட்ட கட்சிகளுக்கு நிர்ணயிக்கப்பட் டுள்ள நிபந்தனைகளைக் கடைபிடிக்க இயலாத ஏராளமான கட்சிகள் நமது நாட்டில் செயல்படுகிறது. ஆனால் இவை தேர்தல் ஆணையத்தில் பதிவு செய்யப்பட்ட கட்சிகள் ஆனதால் இக்கட்சிகள் பதிவு செய்யப்பட்டக் கட்சிகள் என அழைக்கப்படுகிறது.

### தேசிய கட்சிகள்



ஒரு அரசியல் கட்சியைத் தேசிய கட்சியாக அங் கீகரிக்க வேண்டுமெனில் அந்த கட்சி மக்க ளவை தேர்தலில் வாக்குப்பதிவு செய்யப்பட்ட மொத்த வாக்குகளின் ஆறு சதவீதமாவது நான்கு அல்லது அதற்கதிகமான மாவட்டங்களிலிருந்து கிடைத்திருக்க வேண்டும். மேலும் ஒன்றோ அதற்கதிகமோ மாவட்டங்களிலிருந்து நான்கு மக் களவை இடங்களும் கிடைக்க வேண்டும்.

### மாநிலக் கட்சிகள்



ஒரு கட்சியை மாநிலக் கட்சியாக அங்கீகரிக்க வேண்டுமெனில் அந்த கட்சிக்கு மாநில சட்டச பைத் தேர்தலில் மொத்தம் வாக்குப் பதிவு செய் யப்பட்ட வாக்குகளில் ஆறு சதவீதம் வாக்குகளும் இரண்டு இடங்களும் பெற்றிருக்க வேண்டும்.

## கூட்டணி அரசியலும் தேர்தலும்

**மக்களவைத் தேர்தல் அறிக்கையானது**
**மத்திய அரசில் முக்கிய கூட்டணி கட்சிகள் எதிர்பார்ப்புடன்**

டெல்லி: பதினாறாம் மக்களவைத் தேர் தலின் அறிக்கை வெளியிடப்பட்டது மத் திய அரசின் கூட்டணி கட்சிகள் அதிக எதிர்பார்ப்புடன் இந்தத் தேர்தலை அணு குகின்றனர்.

தரப்பட்டுள்ள செய்தியைக் கவனித்தீர்களா? மத்திய அரசிலும் பல மாநிலங்களிலும் அரசியல்கட்சிகள் கூட்டணிகள் உருவாக்கி தேர்தலில் போட்டியிடுகின்றனர். கூட்டணி அரசியல் என்ன என்பதை நாம் ஆராய்வோம். தேர்தலில்

ஒரு கட்சிக்கும் தனிப் பெரும்பான்மை கிடைக்காத சூழல் உருவாவதுண்டு. அத்தகைய சூழல்களில் ஒன்றுக்கொன்று உதவ தயாராகின்ற அரசியல் கட்சிகள் ஒரு பொதுத் திட்டத்தின் அடிப்படையில் ஒன்று சேர்ந்து கூட்டணி உருவாக்கி தேர்தலில் போட்டியிடுகின்றனர். இது தான் கூட்டணி அரசியல் (Coalition Politics) இத்தகைய கூட்டணிகள் வெற்றி பெற்று அதிகாரத்தில் வரும் போது உருவாகின்ற அரசுகள் தான் கூட்டணி அரசுகள்(Coalition Governments).


பிற மாநிலங்களிலிருந்து வேறுபட்டு இந்தியாவில் கூட்டணி அரசியலை நடைமுறைப்படுத்திய ஒரு மாநிலம் தான் கேரளம். 1960– இல் கேரள மாநிலத்தில் கூட்டணி அரசு முதன்முதலாக அதிகாரத்தில் வந்த அரசுகளில் பெரும்பான்மையும் கூட்டணி அரசுகளாக இருந்தது. இன்று மத்திய அரசில் பெரும்பான்மையான மாநிலங்களிலும் கூட்டணி அரசுகள் நிலை நிற்கிறது.

## தேர்தல் குறித்த அறிவியல் ஆய்வு (Psephology)

தேர்தல் குறித்த அறிவியல் ஆய்வைக் குறித்து நீங்கள் தெரிந்து கொண்டிருப்பீர்கள் அல்லவா? தேர்தல் முடிவுகள் வெளியிடுவதற்கு முன்பு அரசியல் கட்சிகளுடையவும், முன்னணிகளுடையவும் வெற்றி வாய்ப்பை ஆராய்ந்து முன்கூட்டி கூறுகின்ற கல்வி பிரிவே தேர்தல் குறித்த அறிவியல் ஆய்வு (Psephology). கருத்துக் கணிப்பு, ஊடகப் பகுப்பாய்வுகள், பேட்டிகள், எக்சிட்போள் முன்தேர்தல் முடிவுகள் ஆகியவற்றை முன்வைத்து முடிவுகளை முன்கூட்டி கூறுவர். அரசியல் கட்சிகளுக்கு சாதகமாகவோ எதிராகவோ உள்ள பொது மக்கள் கருத்து முன்கூட்டி கூறுவதன் வாயிலாகப் புரிந்து கொள்ள இயலும். தேர்தலில் முன்கூட்டி கூறும் முடிவும் பலவேளைகளில் முழுமையாகச் சரியாக இருக்க வேண்டுமென்பதில்லை. முன்கூட்டி கூறுவதற்கு தேர்தல் ஆணையம் இப்போது கட்டுப்பாடுகளைக் கொண்டு வந்துள்ளது.

நமது தேர்தல் முறையில் பல்வேறு சிறப்புகளைப் புரிந்து கொண்டீர்களல்லவா? இதுவரை பகுப்பாய்வு செய்ததிலிருந்து சுதந்திரமும் நடுநிலைமை வகிப்பதுமான தேர்தல் ஆணையம், ஒழுங்கான இடைவெளியில் நடைபெறும் தேர்தல், அனைவருக்கும் வயது வரம்பு வாக்குரிமை, ஆட்சியாளர்களைத் தேர்வு செய்வதில் மக்களின் சுதந்திரம் ஆகியவை இந்திய மக்களாட்சியை வலிமையடைவதற்கு உதவியுள்ளது எனக் கூறலாம். இத்துடன் மக்களின் உயர்வான அரசியல் விழிப்

புணர்வும், யுக்தி சார்ந்து தீர்மானங்களை எடுக்கும் திறனும் முழுமையான அரசியல் பங்களிப்பும் மக்களாட்சியை வலுப்படுத்த உதவுகிறது. அப்பொழுதே மக்களாட்சி பொருளுடையதாக இருக்கும்.






## முக்கிய கற்றல் அடைவுகளில் உட்படுபவை

- மக்களாட்சியில் தேர்தலின் முக்கியத்துவத்தை விளக்குகின்றனர்.
- இந்தியாவின் தேர்தல் முறைகளைப் பகுப்பாய்வு செய்கின்றனர்.
- தேர்தல் ஆணையத்தின் பொறுப்புகளை அட்டவணைப்படுத்துகின்றனர்.
- தேர்தல் குறைபாடுகளை ஆராய்ந்து சீர்திருத்தங்களைக் கூறுகின்றனர்.
- அரசியல் கட்சிகளின் பொறுப்புகளை விளக்குகின்றனர்
- தேர்தல் குறித்த அறிவியல் ஆய்வை விளக்குகின்றனர்.

## மதிப்பிடலாம்

- கீழே கூறப்பட்டுள்ள கூற்றுகளில் வயது வரம்பு வாக்குரிமையுடன் பொருந்துவது எது?
  - A. நாட்டில் அடிப்படைக் கல்வியுள்ள அனைவருக்கும் வாக்குரிமை உள்ளது.
  - B. நாட்டில் குறிப்பிட்ட வயது வரம்பு முடிந்த அனைவருக்கும் ஜாதி- மத- பால் வேறுபாடின்றி வாக்குரிமை உள்ளது.
  - C. நாட்டில் குறிப்பிட்ட வயது வரம்பு முடிந்த எல்லா ஆண்களுக்கும் வாக்குரிமை உள்ளது.
  - D. நாட்டில் வருமான வரி செலுத்துகின்ற அனைவருக்கும் வாக்குரிமை.
- மக்களாட்சியில் தேர்தலுக்கான முக்கியத்துவத்தை விளக்கவும்.
- வெளிப்படையான- மறைமுகத் தேர்தல்கள் எவ்வாறு வேறுபட்டுள்ளது.
- தேர்தல் ஆணையத்திற்கு ஏராளமான பொறுப்புகள் உள்ளன. இந்தக் கூற்றை நிறுவவும்.
- இந்தியத் தேர்தல் அமைப்பில் குறைபாடுகள் உள்ளன. அதற்குத் தீர்வு காண்பதற்கான வழிமுறைகளைக் கூறவும்.
- தேர்தலில் போட்டியிடுகின்ற வாக்காளர்களுக்கு சின்னத்தை வழங்குவது யார்?
  - A. அரசு
  - B. அரசியல் கட்சிகள்
  - C. தேர்தல் ஆணையம்
  - D. மாவட்ட ஆட்சியர்
- இந்தியாவில் பல்வேறு பிரதிநிதித்துவ நிறுவனங்களில் போட்டியிடுவதற்கான குறைந்த வயது வரம்பு என்ன?
- தேர்தல் குறித்த அறிவியல் ஆய்வு என்றால் என்ன?

## தொடர் செயல்பாடுகள்

- மக்களவை/ சட்டசபை தேர்தல்களின் பொருட்டு பத்திரிக்கைகளிலும் பிற ஊடகங்களிலும் வருகின்ற செய்திகளும் படங்களும் சேகரித்து தேர்தல் மலர் உருவாக்கவும்.
- அரசியல் கட்சிகளின் செயல்பாட்டைக் உற்றுநோக்கி ஒரு மக்களாட்சி செயல்முறையில் அரசியல் கட்சிகளின் பங்கைக் குறித்து குறிப்பு உருவாக்கவும்



அலகு

# 08

# நல்ல நாளைக்காக



1993 மார்ச் 26 ஆம் நாள் 'நியூயார்க் டைம்ஸ்' வெளியிட்ட படம் தான் இது. ஆப்பிரிக்கா நாடான சூடானின் தெற்குப் பகுதியில் பட்டினியால் பசி தாங்க முடியாமல் வீழ்ந்த ஒரு குழந்தையும் அந்தக் குழந்தையை உணவாக்கிக் கொள்ள காவல்நிற்கும் ஒரு கழுகும் தான் படத்தில் காணப்படுகிறது. இந்தப்படம் எதைக் குறிப்பிடுகிறது?

உலகம் எதிர்கொள்கின்ற சமூகப் பிரச்சினைகளில் முக்கியமான வறுமையைத் தான் இது குறிப்பிடுகிறது. வறுமை மட்டுமன்றி பிற அனேக சமூகப்பிரச்சினைகளும் நம்மைச்சுற்றி காண இயலும். இதுபோல் சமூகம் எதிர்கொள்கின்ற சிறியதும் பெரியதுமான பிரச்சினைகள் தான் இப்பாடப்பகுதியில் கலந்துரையாடப்படுகிறது.

# சமூகப் பிரச்சினைகளும் தீர்வுகளும்

சமூகத்தில் அனைவரையும் நேரடியாகவோ அல்லாமலோ பாதிக்கக் கூடிய பிரச்சினைகளைச் சமூகப் பிரச்சினையாகக் கருதுகின்றனர். தனிமனிதர்களின் பிரச்சினையோ பொதுவான பிரச்சினையோ சமூகத்தைப் பாதித்து நீண்ட காலம் நிலை நிற்கும் பொழுது அது சமூகப்பிரச்சினையாக மாறுகிறது. சமூகப் பிரச்சினையை மிகத்தெளிவாகப் புரிந்துகொள்ள சில சமூக அறிவியலாளர்களின் வரையறைகளை ஆய்வு செய்யலாம்.

"சமூக வரிசையில் தவிர்க்க முடியாதது எனப் பொதுவாக அங்கீகரிக்கப்படுகின்ற பழக்கவழக்க முறைகளையும் சமூகச்சட்டங்களையும் மீறுவதே சமூகப் பிரச்சினை".

ராபர்ட் மெர்ட்டன் & ராபர்ட் நிஸ்பெட்

சமூகத்தின் சகிப்புத்தன்மை கொண்ட நிலைபேற்றை அழிக்கும் விதமான மனிதர்களின் குணநலன்களின் வேறுபாட்டை சமூகப்பிரச்சினையாகக் கணக்கிடுகின்றனர்.

லென்பேர்க்

மேலே கொடுக்கப்பட்டுள்ள வரையறைகளை ஆய்வுசெய்து சமூகப்பிரச்சினைகளைப் பற்றி உங்களுக்கு எந்தெந்தக் கருத்துக்களை உருவாக்க இயலும்?

- சமூகத்தின் பொதுவான பழக்கவழக்க முறைகளை மீறுதல்.
- சமூகச் சட்டங்களை மீறுதல்.
- சமூகத்தின் நிலைபேற்றிற்கு சவால்.
- 
- 




ஊடகங்களின் தினசரி செய்திகளை ஆய்வுசெய்து பல்வேறு சமூகப் பிரச்சினைகளைக் கண்டுபிடித்து குறிப்பு தயாரிக்கவும்.

இன்றைய சமூகம் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் யாவை?

- வறுமை
- வாழ்விடப் பிரச்சினை

- முதியோர்களின் அனாதைத்தன்மை
- வாலிபர்களின் குற்றச் செயல்கள்
-
-
-
-

கீழே கொடுக்கப்பட்டுள்ள பிரச்சினைகள் சமூகப்பிரச்சினையா என அட்டவணையில் கொடுக்கப்பட்டிருக்கும் குறிப்புகளின் உதவியுடன் மதிப்பிடவும்.



| சமூகப்பிரச்சினைகள் | சமூக அமைதி அழிகிறது | சமூகச் சட்டம் மீறப்படுகிறது | தனிமனித வாழ்க்கை தாறுமாறாகிறது | சமூகப் பாதுகாப்பின்மை | நீண்டகாலம் சமூகத்தில் நிலை நிற்கிறது |
|---|---|---|---|---|---|
| • வறுமை | | | | | |
| • வேலையின்மை | | | | | |
| • வாழ்விடப் பிரச்சினை | | | | | |
| • முதியோர்களின் அனாதைத் தன்மை | | | | | |
| • பெண்களுக்கெதிரான குற்றச் செயல்கள் | | | | | |
| • போதைப் பொருட்களின் பயன்பாடு | | | | | |
| • வாலிபக் குற்றச் செயல்கள் | | | | | |
| • சைபர் குற்றங்கள் | | | | | |
| • குழந்தைகளுக்கு எதிரான குற்றச்செயல்கள் | | | | | |

## வறுமை

வாழ்க்கை, சுகாதாரம், திறன் போன்றவைக்குத் தேவையான மிகவும் குறைவான பொருட்களைப் பெறுவதற்கான வசதியில்லாமையே வறுமை ஆகும். உலக வங்கியின் 2015 ஆம் ஆண்டைய கணக்குகள்படி 702 தச லட்சம் மக்கள் உலகில் வறுமையுடையவர்கள் ஆவர். இந்தியாவில் மட்டுமல்ல, மொத்த உலகத்திலும் வறுமை ஒரு சமூகப்பிரச்சினையாகும். ஐக்கிய நாட்டு சபையின் கணக்குப்படி வளரும் நாடுகளில் ஐந்தில் ஒரு நபர்



வறுமைக்கோட்டிற்குக் கீழ் வாழ்கிறார்.. திட்டக்குழுவின் கணக்குகளின் படி இந்தியாவில் 22% மக்கள் வறுமையின் கொடுமையை அனுபவிப்பவர்களாவர்.

நீங்கள் வாழும் பகுதியின் தன்னாட்சி நிறுவனத்தின் குறிப்புகளை ஆய்வு செய்து அங்கே எத்தனை சதவீதம் மக்கள் வறுமைக்கோட்டிற்கு கீழே வாழ்கிறார்கள் எனக் கண்டுபிடிக்கவும்.

## வேலையின்மை



வேலையின்மை என்பது வறுமையோடு தொடர்புகொண்ட சமூகப்பிரச்சினை ஆகும். மக்களில் ஒருபிரிவினர் வாழ்வதற்காக ஏதேனும் ஒரு தொழிலைக் கண்டடையும் போது உலகில் பெரும்பாங்கான மக்களுக்கும் அது இயலாமல் போகிறது. வேலை செய்வதற்கான உடல், மனத்திறமையும் அதற்கான வயதும் சம்மதமும் இருந்த போதிலும் வேலை கிடைக்காத நிலைமையே வேலையின்மை. வேலையின்மையின் விளைவுகளை உங்கள் பகுதியிலும் காண இயலும். பிற மாநிலங்களிலிருந்து வேலைதேடி கேரளாவுக்கு எவ்வளவு பேர் வருகிறார்கள்.

வறுமை வேலையின்மைக்கு காரணமாவது எவ்வாறு?

## வாழ்விடப் பிரச்சினை

மனிதனின் அடிப்படைத் தேவைகளில் ஒன்றல்லவா வாழ்விடம். வாழ்விடத்தைப் பற்றிய சமூகத்தின் கண்ணோட்டங்கள் வேறுபட்டதாகும். வாழ்விடம் இல்லாமை இந்தியா எதிர்கொள்கின்ற ஒரு முக்கியமான சமூகப்பிரச்சினையாகும். ஒரு தனி நபருக்கும் குடும்பத்திற்கும் ஆரோக்கியமான முறையில் வாழ்க்கை நடத்துவதற்கு தேவையான ஒரு வீடு வேண்டும் என்பது குடிமகனின் உரிமையில் உட்படுகிறது. பாதுகாப்பானதும் பொருத்தமானதுமான வாழ்விடத்தைச் சொந்தமாக்குவதற்கோ நிலைநிறுத்துவதற்கோ இயலாத நிலமையே வாழ்விடமில்லாமை.




வாழ்விடங்கள் அமைப்பது தற்போது ஓர் ஆடம்பரமாக மாறுகிறதா? கலந்துரையாடவும்

# முதியோர்களின் அனாதைத் தன்மை




நமது நாட்டில் அனாதைகளான முதியோர்களின் எண்ணிக்கை கூடிவருகிறது. சிறுகுடும்பங்களின் அதிகரிப்பும். சிறப்பான வசதிகளைத் தேடி நகரங்களுக்குக் குடிபுகுதலும், முதியோர்களுக்கு முன்னர் கிடைத்திருந்த கவனிப்புகளோ ஆதரவோ கிடைக்காமல் போவதற்கு காரணமாகிறது. அவர்கள் அனாதைகள் ஆக மாறுவதற்கு இது காரணமாகிறது. முதியோர்கள் அன்பு இல்லாமை, அங்கீகாரம் இல்லாமை, தனிமைப்படுதல், நிலையற்ற உணர்வு, பொருளாதார நெருக்கடி, சுகாதாரப் பிரச்சினைகள், மன உளைச்சல் போன்ற பிரச்சினைகளை எதிர்கொள்கின்றனர். இது அவர்களுக்குப் பல உள பிரச்சினைகளை ஏற்படுத்துகிறது. அவர்களது அனாதைத் தன்மை தற்போது ஒரு பொதுப் பிரச்சினையாக வளர்கிறது. அதனாலேயே நமது நாட்டில் முதியோர் இல்லங்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது.

முதியோர்களுக்கு உதவிபுரிய உங்களுக்கும் இயலும். அதற்காக கீழே குறிப்பிடப்பட்டுள்ளவற்றை நீங்கள் செய்வதுண்டா?

| | ஆம் | இல்லை | சிலவேளைகளில் மட்டும் |
|---|---|---|---|
| முதியோர்களின் தேவையைப் புரிந்துகொண்டு அவர்களுக்கு உதவிகள் செய்வதுண்டா? | | | |
| பேருந்துகளில் முதியோர்களுக்கு நீங்கள் இருக்கையை விட்டுக் கொடுப்பதுண்டா? | | | |
| வரிசையில் நிற்கும் போது முதியவர்களுக்கு நீங்கள் முன்னுரிமை வழங்குவதுண்டா? | | | |
| பேருந்திலோ பக்கத்திலோ உள்ள முதியோர்களை அணுகி அவர்களிடம் பேசுவதுண்டா? | | | |
| குடும்பத்திலோ பக்கத்திலோ உள்ள முதியோர்களை அணுகி அவர்களிடம் பேசுவதுண்டா? | | | |
| முதியோர் இல்லங்களுக்குச் சென்று பார்வையிடுவதுண்டோ? | | | |
| பள்ளிக்கூடங்களில் வயோதிகர் தினம் கடைபிடிப்பதுண்டா? | | | |

## பெண்களுக்கு எதிரான குற்றச் செயல்கள்

பெண்களுக்கெதிரான குற்றச்செயல்களும் ஒரு பெரிய சமூகப் பிரச்சினையாகும். சமூகத்தில் பெண்கள் எதிர்கொள்கின்ற எந்தெந்தப் பிரச்சினைகள் உங்கள் கவனத்திற்கு வந்ததுண்டு?




*கேரளா மகளிர் அமைப்பு அலுவலகம்*

- கல்விக்கான உரிமை மறுத்தல்.
- ஒரே வேலைக்கு வெவ்வேறு கூலி.
- திறமையை வெளிப்படுத்துவதற்கான வாய்ப்பை மறுத்தல்.
- பொதுத்துறையிலிருந்து தள்ளிவைத்தல்
- 


பெண்களின் பாதுகாப்பிற்காகச் செயல்படுகின்ற அரசாங்க அமைப்புகள் எவையெனக் கண்டுபிடித்து வகுப்பில் வெளியிடவும்.


## போதைப் பொருட்களின் பயன்பாடு

சமூகத்தில் போதைப் பொருட்களின் பயன்பாடு அதிகரித்து வருகிறது. புகையிலை, மது, போதைமருந்து போன்ற போதைப் பொருட்களை கட்டுப்பாட்டுடன் பயன்படுத்தலாம் என ஆரம்ப கட்டத்தில் நினைக்கின்ற மக்கள் காலதாமதமின்றி அதற்கு அடிமையாவார்கள். காலப்போக்கில் அவர்கள் போதைக்கு அடிமைப்பட்டவர்களாக மாறுகின்றனர். தனிமனிதனுக்கு ஆரோக்கிய பிரச்சினையை ஏற்படுத்துவதுடன் குடும்ப அழிவுகளுக்கும் சமூக அளவில் தனிமைப்படுவதற்கும் போதையின் பயன்பாடு காரணமாகிறது. போதைப்பொருட்களுக்கான ஆர்வம் ஒரு நோயாகும்



போதைப் பொருட்களின் பயன்பாடு தனிமனிதனை மட்டுமல்லாது மொத்த சமூகத்தையும் பாதிக்கிறது என்பதைப் புரிந்து கொண்டீர்கள் அல்லவா? அதனால் போதைப் பொருட்களின் பயன்பாடு ஒரு சமூகப்பிரச்சினையாகக் கணக்கிட இயலும்

**போதைப் பொருட்களின் தீமைகளைப் பற்றி மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த நமக்கு எவையெல்லாம் செய்ய இயலும்.?**



சமூக அறிவியல் மன்றத்தின் தலைமையில் போதை எதிர்ப்புச் சுவரொட்டிகள் தயாரித்து பள்ளிக்கூடத்திலும் சுற்றுப்புறங்களிலும் ஒட்டி வைக்கவும்.



## குமரப் பருவக் குற்றச் செயல்கள்

குழந்தைகளிடையே காணப்படும் குற்றச்செயல்களும் தற்போது ஒரு பெரிய சமூகப்பிரச்சினையாக மாறியுள்ளது. 18 வயதிற்குட்பட்ட குழந்தைகள் செய்கின்ற குற்றச்செயல்களைக் குமரப்பருவக் குற்றச்செயல்களாகக் கணக்கிடுகின்றனர். இவர்கள் குமரப்பருவக் குற்றம் சுமத்தப்பட்டவர் (Juvenile Offenders) என அறியப்படுகின்றனர். தினசரிகளில் பல்வேறுபட்ட செய்திகள் குமரப்பருவக் குற்றச்செயல்களைப் பற்றி வந்துகொண்டிருக்கிறது. சிறுவயதிலேயே குழந்தைகள் குற்றவாளிகள் ஆவதற்கு பல காரணங்கள் உண்டு.

- குடும்ப உறவுகள் நலிவடைதல்.
- போதைப் பொருளின் பயன்பாடு.
- ஒளி ஊடகங்களின் தவறான பயன்பாடு.
- சமூக மதிப்புகளின் வீழ்ச்சி.
- 
- 

குற்றங்கள் செய்வதற்கான மனநிலையைக் குழந்தைகளிடம் இல்லாமல் பண்ணுவது என்பது மொத்த சமூகத்தினுடையவும் கடமையாகும். பள்ளிக்கூடங்கள், காவல்துறை அமைப்பு, விழிப்புணர்வு, பின்தாங்கும் அமைப்பு, சமூகச்செயல்பாடு போன்றவை குழந்தைகளின் குற்றம் செய்யும் மனநிலையைக் குறைக்க உதவும். குமரப்பருவக் குற்றச்செயல்களைத் தடைசெய்வதற்கான நடவடிக்கைகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

### கவுன்சிலிங் மையம்



குழந்தைகளுக்கு குணநலன்கள் உருவாக்குவதற்கும் தனித்துவத்தின் வளர்ச்சிக்கும் குடும்பம் முக்கியப் பங்கு வகிக்கிறது. குழந்தைகளின் தேவைகளைப் புரிந்துகொள்வதற்கும் அவர்களைப் புரிந்து கொள்வதற்கும் குடும்பத்திற்கு உதவிபுரிய கவுன்சிலிங் மையங்களுக்கு இயலும்.

### சிறுவர்களின் நீதிமன்றம்



குமரப்பருவத்தினரின் குற்றச்செயல்களைக் கையாள்வதற்காக நிறுவப்பட்ட அமைப்பே சிறுவர்கள் நீதிமன்றம். பிற நீதிமன்றங்களின் செயல்பாடுகளிலிருந்து முற்றிலும் வேறுபட்டதாக இதன் செயல்பாடுகள் காணப்படுகிறது.

### சைல்ட் ஹெல்ப் லைன்



குழந்தைகள் எதிர்கொள்கின்ற பிரச்சினைகளும் கஷ்டங்களும் கண்டடைந்து அவர்களுக்கு உதவி செய்யவும் பாதுகாப்பதற்குமாக இந்திய அரசாங்கத்தின் மினிஸ்டரி ஆப் வுமண் அன்ட் சைல்ட் டெவலப்மெண்டின் கீழ் செயல்படுகின்ற ஒரு முகமையே சைல்ட் லைன். டாட்டா இன்ஸ்டிடியூட் ஆஃப் சோஷியல் சயன்ஸின்( ) விரிவுரையாளரான ஜூஹோ பில்லிமோறி 1996 இல் பம்பாயில் சைல்டு லைனை நிறுவினார். பின்னர் இந்திய அரசாங்கம் இதன் செயல்பாட்டை நாடு முழுவதுமாக பரவலாக்கியது. டோல் ஃபிரீ எண்ணான 1098- இல் எந்த நேரமும் சேவை கிடைக்கும்.

**சைல்டு கைடன்ஸ் கிளினிக்** – குழந்தைகளின் பிரச்சினைகளைக் கண்டுபிடிக் கவும் பகுப்பாய்வு செய்வதற்குமான அமைப்பு.

**கவுன்சிலிங் மையம்** – குழந்தைகளின் பழக்கவழக்கங்களுமாகத் (Behavioural) தொடர்பு கொண்ட பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கு

குழந்தைகளுக்கிடையேயான குற்றச் செயல்களின் காரணங்களும் அவற்றிற்கான தீர்வு முறைகளும் உட்கொள்கின்ற ஒரு தேடல் குறிப்பு தயாரிக்கவும்.

## சைபர் குற்றச்செயல்கள்




தகவல் தொழில்நுட்பத் துறையில் தற்போது பெரிய மாற்றங்கள் வந்து கொண்டிருக்கிறது. நிமிட நேரம் கொண்டு அறிவின் எந்த எல்லை வரை வேண்டுமானாலும் செல்லலாம். இணையதள வசதியை நேரடியாகவும் அல்லாமலும் பயன்படுத்தாதவர்களின் எண்ணிக்கை மிகமிகக் குறைவாகும். கணினி, கைபேசி, டாபுகள், தொலைக்காட்சி போன்ற எலக்ட்ராணிக் ஊடகங்கள் தகவல் சேகரிப்பிற்கும் பொழுது போக்கிற்குமாகப் பயன்படுத்தப்படுகிறது. பொதுமக்களில் சிலர் தகவல் தொழில்நுட்பத்தை தவறாகப் பயன்படுத்துவதுண்டு. தகவல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்திச் செய்கின்ற குற்றங்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. சமூகவலைத்தளங்கள் தனிமனிதர்களின் சமூக வாழ்க்கையிலும், தனிப்பட்ட வாழ்க்கையிலும் பல்வேறு பிரச்சினைகளுக்குக் காரணமாகிறது. தகவல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தியுள்ள குற்றச் செயல்களைக் கையாள்வதற்கு தனி அமைப்பாக சைபர் செல் பயன்படுகிறது.

சமூக வலைத்தளங்களின் நன்மை தீமைகளைப் பற்றி ஒரு விவாதம் நடத்தவும்.

## குழந்தைகளுக்கு எதிரான குற்றச் செயல்கள்

குழந்தைகள் நாட்டின் செல்வமாகும். அவர்களுக்கு உணவு, கல்வி, முன்னுரிமை, அன்பு போன்றவை கிடைக்கச் செய்வது சமூகத்தின் கடமையாகும். இந்தக் கடமையிலிருந்து பின் செல்வது சமூகத்தினுடையவும் நாட்டினுடையவும் எதிர்காலத்திற்குத் தீங்கு விளைவிக்கும். உலகின் பல்வேறு பகுதிகளிலும் குழந்தைகளுக்கு எதிரான பல்வேறு குற்றச் செயல்கள் நடக்கிறது. குழந்தைகளுக்கு எதிராக நடக்கும் குற்றச் செயல்களைக் காட்டும் படங்கள் தான் கொடுக்கப்பட்டுள்ளது. இந்தப் படங்கள் எந்தெந்த அநீதிகளைக் குறிப்பிடுகிறது?






சமூகத்தில் குழந்தைகள் எதிர்கொள்ளும் பல்வேறு குற்றச் செயல்களைப் பற்றி ஒரு அறிக்கை தயாரிக்கவும்.

நாம் கலந்துரையாடல் நடத்திய சமூகப்பிரச்சினைகளை அலசி ஆராயும் போது சில விஷயங்கள் நமக்குத் தெரியவரும்:

- சமூகப் பிரச்சினைகளில் பலவும் ஒன்றோடொன்று தொடர்பு கொண்டுள்ளது.
- சமூகப் பிரச்சினைகள் உருவாக்கும் விளைவுகளுக்குப் பொதுவான குண முண்டு.
- காலத்திற்கு ஏற்றவாறு சமூகப்பிரச்சினைகளுக்கு மாற்றம் ஏற்படுவதுண்டு.
- சமூகப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண ஒன்றிணைந்த செயல்பாடு இன்றி யமையாததாகும்.

நமது சமூகத்தில் காணப்படுகின்ற சில பிரச்சினைகளைப் பற்றிக் கருத்து அடைந் தீர்களல்லவா? இது போன்ற சமூகப் பிரச்சினைகள் எல்லா தேசங்களிலும் காணப் படுகிறது. சில நாடுகளில் சமூகப்பிரச்சினைகள் தீவிரமாகக் காணப்படும். கிராமத் தின் சமூகப் பிரச்சினைகள் நகரத்தின் பிரச்சினைகளை விட வேறுபட்டுக் காணப் படும். இதுபோன்ற சமூகப் பிரச்சினைகளைப் பற்றி படிக்கவும் எதிர்க்கவும் சமூக வியல் (Sociology) நிரந்தரமாக முயற்சித்துக் கொண்டிருக்கிறது.


நம்மைச் சுற்றிலும் காணப்படும் பல்வேறு சமூகப் பிரச்சினைகளுக்கு எவ் வாறு தீர்வுகாண இயலும். ஒரு கலந்துரையாடல் நடத்தவும். கலந்துரையா டலிலிருந்து கிடைக்கும் அறிவுரைகளை அரசாங்கத்திற்கு சமர்பிக்கவும்.

**நல்ல நாளைக்காக**

↓

**சமூகப் பிரச்சினைகளும் தீர்வும்**

- வறுமை
- வேலையின்மை
- வாழ்விடப் பிரச்சினை
- முதியோர்களின் அனாதைத் தன்மை
- பெண்களுக்கு எதிரான குற்றச் செயல்கள்
- போதைப் பொருட்களின் பயன்பாடு
- குமரப்பருவத்தில் குற்றச் செயல்கள்
- சைபர் குற்றச் செயல்கள்
- குழந்தைகளுக்கு எதிரான குற்றச் செயல்கள்



## முக்கிய கற்றல் அடைவுகளில் உட்படுபவை

- சமூகப் பிரச்சினைகள் எவை என வரையறுக்கப்படுகிறது.
- சமூகப் பிரச்சினைகளின் சிறப்பம்சங்களும் விளைவுகளும் விளக்கப் படுகிறது.
- பல்வேறு சமூகப்பிரச்சினைகள் பகுப்பாய்வு செய்யப்படுகிறது.
- சமூகப் பிரச்சினைகள் எவ்வாறு ஒன்றோடொன்று தொடர்பு கொண்டு காணப்படுகிறது எனப் புரிந்து கொள்கின்றனர்.
- சமூகப் பிரச்சினைகளை அறிவியல் முறையில் எதிர்க்கவும் தீர்வு முறைகளைக் கண்டடையவும் இயல்கிறது



## மதிப்பிடலாம்

- சமூகப் பிரச்சினை என்றால் என்ன?
- சமூகம் எதிர்கொள்ளும் பல்வேறு பிரச்சினைகளை விவரிக்கவும்.
- சமூகப் பிரச்சினைகளின் பரஸ்பர உறவைப் பகுப்பாய்வு செய்யவும்.



## தொடர் செயல்பாடுகள்

- உங்கள் பகுதியிலுள்ள ஒரு சமூகப் பிரச்சினையைக் கண்டுபிடிக்கவும். ஒரு களப்பயணத்தின் வாயிலாக அந்தப் பிரச்சினையோடு தொடர்பு டைய விஷயங்களைப் பற்றி தகவல் சேகரிக்கவும். அவற்றைப் பகுப் பாய்வு செய்து அறிக்கை தயாரிக்கவும்.
- உங்களது சுற்றுவட்டாரத்தில் உள்ள ஏதேனும் ஒரு சமூகப் பிரச்சினை யைப் பற்றி ஒரு செய்திப்படம் தயாரிக்கவும்.